# அறத்தமிழ் ஞானம்

அறம் : 1 க  1 - 9 - 92  சிந்தனை : 9 கூ

## பாரதியாரின் 71-வது நினைவுச் சிறப்பிதழ்

நிறுவனரின் சிந்தனைத் தொகுப்புகளும்
பிற ஆக்கங்களும்



விநாயகர் தரும நிதிய
இலவச வெளியீடு

சாதி, சமய, இன வேற்றுமை அற்ற மாதாந்த ஆத்ம சிந்தனைச் சஞ்சிகை

— சிக்கனம் - சமத்துவம் - உடல் உழைப்பு —



உ

சிவமயம்

# சமர்ப்பணம்

இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாகத் தங்கள் சக்தியை எந்நேரமும் உதவிக்கொண்டிருக்கும் ஐந்து பூதங்களான காற்று, தீ, நீர், நிலம், ஆகாயம் இவற்றிற்கும், எம்மை உருவாக்கிய தந்தை, தாய், குரு முதலானோருக்கும், நாம் வாழ உணவு அளித்துக்கொண்டிருக்கும் தாவர வர்க்கம் முதல் மனிதகுலம் வரையான சகல சீவராசிகட்கும் எமது வணக்கத்தைச் செலுத்தி இவர்கள் பாதார கமலங்கட்கு இந் நூலைச் சமர்ப்பணம் செய்வதில் பூரண ஆத்ம திருப்தி அடைகின்றோம்.

விநாயகர் தரும நிதியம் — நிறுவனர்

## உள்ளே ..............


- ★ அறிவுக் களஞ்சியம்
- ★ வேள்வியின் மகிமை
- ★ கந்தபுராண வரலாற்றில் ஐந்துபூத விளக்கங்கள்
- ★ எங்களுக்காக நாங்களே சிந்திக்கவேண்டும்
- ★ எனது பார்வையில் நிறுவனர்
- ★ வாந்தி பேதியும், தடுப்பு முறைகளும்
- ★ வளர்ப்பு மிருகங்களுக்கு ஏற்படும் நோய்களும்— சிகிச்சை முறைகளும்
- ★ நிறுவனரின் வாழ்க்கை வரலாறு
- ★ உண்மையே கடவுள்
- ★ பாரதியார் நினைவுத் துளிகள் — கவிதைகள்

— ௳ —

# எண்ணங்கள்........

07 - 08 - 92-ம் திகதிய ஈழநாதம் இதழில் மு. திருநாவுக்கரசு அவர்கள் எழுதியுள்ள கட்டுரையினை நாம் வாசித்தபோது மிகுந்த மனமகிழ்வடைந்தோம். தொலைத்தொடர்புச் சாதனங்கள் வாயிலாக மேற்குலக நாடுகள் மூன்றாம் உலகநாடுகள்மீது நடாத்துகின்ற கலாச்சார சுரண்டல்பற்றி சிந்தனையாளர் திருநாவுக்கரசு அவர்கள் தெளிவாகவும், அழுத்தந் திருத்தமாகவும் உண்மையான கருத்துக்களைத் தெரிவிக்கின்றார், அவரது சிந்தனையில் உதிக்கும் கருத்துக்களோடு எமது எண்ணத்தில் எழும் கருத்துக்களும் இசைவதால் அவருடைய கட்டுரையினை இவ் இதழில் பிரசுரம் செய்வதோடு இக்கட்டுரை பற்றிய சில கருத்துக்களையும் கூற விரும்புகின்றோம்.

மேலைத் தேசத்தின் விஞ்ஞான தொழில்நுட்ப சாதனைகள் அனைத்தையும் நிராகரிக்க வேண்டியதில்லையென்றும் அவற்றைச் சுயதெரிவு செய்வதன்மூலம் எமது சூழலிற்கும், எமது தேவைக்கும், பிரச்சனைகளுக்குமேற்ப எமக்குப் பொருத்தமான ஒரு சிந்தனை முறை தேவையென்கின்றார். முற்றிலும் உண்மையே. வரவேற்கத் தக்க தொன்றாகும். இதனை விளக்கும்போது செருப்புக்கேற்ற காலாக இல்லாமல் காலுக்கேற்ற செருப்பாக இருக்க வேண்டும் எனக் கூறுகிறார்.

எமது பிரதேச மக்களின் மீது மேலைத் தேசத்தவர்களினால் மூடிப் போர்க்கப்பட்டுள்ள கற்பனையும், மாயையும், அதீதப்போக்கினையும் உடைத்தெறிவதின் மூலமே இப்பிராந்திய மக்கள் விமோசனம் அடையமுடியும் என்று தெளிவாகத் தெரிவிக்கின்றார். உண்மையைஉள்ளபடியே கண்டறிவதும் அந்த உண்மை உருவாகக்கூடிய நல்லவை எவை என அடையாளம் காண்பதுமே அவசியமான சிந்தனையாகும். மக்களின் நன்மைக்காக விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பால் இவற்றைக் கண்டறிந்து விளக்கும் ஒருவன்தான் சிறந்த சிந்தனையாளனாய் நிலைப்பான்.

அவருடைய கட்டுரையின் இறுதியில், "எமது இன்றைய தேவை, கற்பனைகளைக் கைவிட்டு மேலைத் தேசத்தின் கருத் தாக்கிரமிப்புக்கும் திரிபுகளுக்கும் ஆட்படாது எத்தகைய இடர் களையும் தாண்டி எமக்குப் பொருத்தமான கருத்துக்களையும், எண்ண ஓட்டங்களையும் உருவாக்க வேண்டும் என்பதே." இது யதார்த்தமான எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய சிறந்த சத்தியவாக்கு என்றால் மிகையாகாது. இவ் வகையான உண்மைக் கருத்துக்களைப் பின்பற்ற அனைவரும் முயலுவோம். மாயையில் இருந்து விலகுவோம்.

சிறப்பான இவ்வாறான சிந்தனைகளைத் தெரிவிக்கும் இக் கட்டுரையாளர் போன்று இன்னும் சிலர் சிந்தனையாளர்களாக மாறுவார்களேயானால் எமது தமிழ் ஈழத் திருநாடு வெகுவிரைவில் நல்ல மாற்றம் பெற்று யப்பான் நாட்டைப்போல் உயர்வான நிலை யடையும் என்பது திண்ணம்.

01-09-92 — நிறுவனர் —

---

உ

# சனசமூக நிலையங்களுக்கு ஒரு வேண்டுகோள்

எமது விநாயகர் தரும நிதியத்தின் பணிகளில் ஒன்றாகிய அறநெறிச் சிந்தனைகளை இளம் பராயத்தினரிடையே ஊட்டும் முயற்சி பற்றி இவ்விதழில் சிறிது விளக்க விரும்புவதுடன் சன சமூக நிலையங்கள் எவ்வாறு இப்பணிகளில் உதவ முடியும் என் பதையும் கூறவிரும்புகின்றோம். அவற்றை நாம் வற்புறுத்தவில்லை. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது.

சென்ற வருடம் 1991-ம் ஆண்டு அறநெறி வினைத்திறன் போட்டிப் பரீட்சையொன்றை 5-ம் ஆண்டு மாணவ மாணவிய ரிடையே நடாத்தியிருந்தோம். இதற்கென அறநெறி மணிகள் என்னும் நூலில் 1200 பிரதிகள் பதிப்பித்து, இப்பிரதிகளை நேரில் கொண்டுபோய் எமது சுற்றாடலிலுள்ள 25 பாடசாலைகளுக்கு விநியோகித்து விண்ணப்பத்தை அனுப்பும்படி கேட்டிருந்தோம். 16 பாடசாலைகள் மட்டும் விண்ணப்பித்திருந்தன. இவற்றில் 11 பாடசாலைகள் பரீட்சைக்கு தகுதிபெற்று 10 பாடசாலைகள்

தேர்வில் பங்கு கொண்டன. சிறப்பாக தேர்வு எழுதிய மாணவர்களுக்கு மொத்தப் பரிசாக ரூபா 21,550/- சென்றவருட சரஸ்வதி பூசைத் தினத்தன்று வழங்கிக் கெளரவித்தோம். இதனைத் தொடர்ந்து எமது சிந்தனைகளில் இவ் அறநெறிக் கல்வி தமிழீழத்தில் உள்ள அனைத்து இளம் பராயத்தினருக்கும், குறிப்பாக 5-ம், 6-ம், 7-ம் ஆண்டு மாணவர்களுக்கு புகட்டப்பட வேண்டும் என்று தோன்றியது.

அதன் விளைவாக வகுப்புகளுக்கு ஏற்ற வகையில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், திருக்குறள், வெற்றிவேற்கை, நல்வழி, விவேகசிந்தாமணி போன்ற இன்னோரன்ன நீதி நூல்களை பாடத்திட்டமாக பதிப்பித்தும், தேர்வு பற்றிய விதிமுறைகளை விளக்கியும், கோட்டக் கல்வி அதிகாரிகளின் ஆதரவோடு யாழ் மாவட்டத்தில் உள்ள, எமக்கு முகவரிகள் தெரிந்த 160 பாடசாலைகளுக்கு வகுப்புகளுக்கு ஏற்றவகையில் இலவசமாக பிரதிகளை அனுப்பி வைத்து விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி கேட்டிருந்தோம். வெளி மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, போன்ற இடங்களுக்கு தற்போதைய நாட்டு நிலைமைகளினால் ஏற்பட்ட தபால் போக்குவரத்து சீர்கேடு காரணமாக உரிய முறையில் செயல்பெற முடியவில்லை.

பருத்தித்துறை கல்விக்கோட்டப் பிரிவில் இருந்து 16 பாடசாலைகளும், மருதனார்மட கல்விக்கோட்டப் பிரிவில் இருந்து 04 பாடசாலைகளும், பண்டத்தரிப்பு கோட்டப்பிரிவில் இருந்து 02 பாடசாலைகளுமாக மொத்தம் 20 விண்ணப்பங்கள் மட்டுமே எமக்கு கிடைத்தன. இவ்விண்ணப்பங்களில் மொத்தம் 1492 விண்ணப்பதாரிகள் அடங்கியிருந்தனர். விண்ணப்பங்கள் கிடைத்த பின்னர் விண்ணப்பித்த பாடசாலைகளுக்கு, எம்மிடமிருந்த பிரதிகளில் மாணவர் தொகைக்கு ஏற்றவாறு நாலு மாணவர்களுக்கு 1 பிரதி வீதம் மேலதிக பிரதிகளை தேர்வுக்குத் தயாராகும் மாணவ மாணவிகளுக்கு சுற்று முறையில் படிக்கும் வகையில் பாடசாலைகளுக்கு கொண்டு சென்று கொடுத்தோம்.

அடுத்து பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு, அச்சிடப்பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதுடன் பரீட்சைத் திகதி குறித்து பாடசாலைகளுக்கு நேர காலத்துடன் அறிவித்து 18-07-92-ல் தொண்டர்களை ஒழுங்கு செய்து, அவர்கள் மூலம் பரீட்சையை, அரசாங்கத்தால் நடாத்தப் பெறுகின்ற ஒரு பரீட்சை போன்று நடாத்தினோம்.

என்ன ஏமாற்றம்! பரீட்சைக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளில் அரைவாசிப் பேர்தானும் பரீட்சைக்குத் தோற்றவில்லை.

சில பாடசாலைகளில் தோற்றிய வீதம் மிகவும் குறைவாய் இருந்தது. இது நிற்க விடைத்தாள்களை நாம் புள்ளியிட்டு பார்த்த போது அனேக பிள்ளைகள் பெற்ற புள்ளிகள் பூச்சியமாகவும், மிகவும் குறைந்த புள்ளிகளாகவும் இருந்ததைக் கண்டோம். இதன் மூலம் பிள்ளைகளுக்கு உரியவாறு இவ் அறநெறிப் பாடத் திட்டங்கள் கற்பிக்கப் பெறவில்லை என்பதை உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இப்பாடத்தை சிறுவர்களுக்கு கற்பிப்பது எமது கடமை என்ற உணர்விலேயன்றி வேறு எவ்வித பிரதிப் பிரயோசனத்தையும் நாம் கருதவில்லை. அறம் இன்றி எதுவுமில்லை. இன்றைய ஆசிரிய சமுதாயத்திற்கு இவை முக்கியமானதெனத் தெரியவில்லை.

இந்நிகழ்வுகளால், இத்தேர்வு எமக்குப் பெரிய ஏமாற்றத்தையும், சில படிப்பினைகளையும் பெற்றுத் தந்துள்ளது. அறநெறிப் பண்பாடு கற்காத ஆசிரிய சமுதாயத்தையிட்டு நன்றாக உணர்ந்து கொண்டோம். இதனடிப்படையில் வரும் காலத்தில் அறநெறிக் கருத்துக்களை, கிராம இளம் பராயத்தினருக்கு சனசமூக நிலையங்களூடாக கற்பித்தல் நலமென எண்ணுகின்றோம். எமது வெளியீடுகளில் வெளியாகும் அறநெறிப் பகுதிகளை சனசமூக நிலையங்கள் வாரந்தோறும் ஒவ்வொரு மணித்தியாலம் இத் துறைகளில் ஈடுபாடுள்ளவர்களைக் கொண்டு இளம் பிராயத்தினருக்கு கற்பித்து வரின் அறநெறி அறிவு வளர்ந்து பெரும் பயன் விளையும் என்பதோடு சஞ்சிகைகள் மூலம் எம்மால் நடாத்தவிருக்கும் போட்டிகளில் அவர்கள் விடையளிக்க இலகுவாக இருக்கும் என்று நம்புகின்றோம். மாதத்தில் நாலு மணித்தியாலம் கற்பிக்கும் சனசமூக நிலையங்கட்கு சிறு உதவிகளை வழங்கவும் எண்ணியுள்ளோம். ஆனால் செயலுக்குரிய பலன் கிடைக்குமா என்பது சந்தேகத்திற்குரியதாயே உள்ளது. உண்மைதான் கடவுள் என்பது எவருக்கும் புலப்படவில்லை. சிறுபராயம் தவறினால் அறநெறி அறிவை வளர்க்க முடியாது.

கிராம மட்டத்தில் நற்பிரசைகளை உருவாக்கும் பொறுப்பு சனசமூக நிலையங்களைச் சார்ந்ததே என்ற வகையில் இப்பணி சிறப்பாக இருக்கும் என நம்புகிறோம். எனவே சனசமூக நிலைய நிர்வாகிகள் தங்கள் சனசமூக நிலையங்களை எங்கள் நிலையத்தில் பதிவுசெய்து ஏழு (7) பிரதிகளைப்பெற்று சுழற்சி முறையில் மாணவ மாணவிகளிடையே விநியோகம் செய்து, கற்பித்து உங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எனவே இப்பணியில் சனசமூக நிலையங்கள் எம்மை ஊக்குவிப்பதோடு நல்லதொரு சமுதாயம் மலர உதவவேண்டுமென அன்போடும், பண்போடும், பணிவோடும் இருகரம் கூப்பி வேண்டுகின்றோம். நன்றி.

— **திருவனர்** —

உ

# அறிவுக் களஞ்சியம்

1. நரம்பு மண்டலத்திற்கு வேண்டிய தாது உப்பு எது ?
   மக்னீசியம்.

2. ஐதரசன் வாயு நீரில் எத்தனை சதவிகிதம் உள்ளது ?
   11 சதவிகிதம் உள்ளது.

3. நாம் நிமிடத்திற்கு எத்தனை முறை சுவாசிக்கின்றோம் ?
   15 முதல் 18 வரை.

4. கடல் ஆமைகளின் வாழ்நாள் எவ்வளவு காலம் ?
   சுமார் 150 ஆண்டுகள்.

5. மண்ணின் அமிலத் தன்மையை நீக்குவது எது ?
   சுண்ணாம்பு.

6. கண்பார்வை இழந்தவர்கள் பயன்படுத்தும் எழுத்து முறையின் பெயர் என்ன ?
   ப்ரெயில் எழுத்துக்கள்.

7. லீப் வருடத்தை உருவாக்கியவர் யார் ?
   ஜுலியஸ்ஸீஸர் கி. மு. 45 இல்.

8. மின்சார மோட்டாரைக் கண்டறிந்தவர் யார் ?
   நிக்கோலா டெஸ்டா.

9. விண்வெளி சென்ற முதல் மனிதர் யார் ?
   யூரி-சுகாரின், ரஷ்யா.

10. நாம் உபயோகிக்கும் கராம்பு எது ?
    ஒரு மலரின் மொட்டு.

11. இந்தியாவையும் இலங்கையையும் பிரிக்கும் நீர்ப்பகுதி எது ?
*பாக்குநீரிணை.*

12. இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கியவர் யார் ?
*அம்பேத்கார்.*

13. பொலித்தீன் எதிலிருந்து தயாரிக்கப்பெறுகிறது ?
*எத்திலீன்.*

14. முதல் உலகத் தமிழ் மாநாடு எந்த வருடம் எங்கே நடந்தது ?
*1966 ஏப்ரல் 14, கோலாலம்பூர்.*

15. மிகவும் விலையுயர்ந்த உலோகம் எது ?
*பிளாட்டினம்.*

16. பண்டைத்தமிழ் இலக்கணம் எது ?
தொல்காப்பியம்.

17. ஞானபீடப் பரிசு பெற்ற முதல் தமிழ் எழுத்தாளர் யார் ?
*அகிலன்.*

18. திருவள்ளுவரின் பிறந்த ஊர் எது ?
மைலாப்பூர்.

19. பொஸ்பரசைக் கண்டறிந்தவர் யார் ?
*பிராண்ட்*

20. யுத்தமும் சமாதானமும் என்ற புகழ்பெற்ற நவீனத்தை உருவாக்கியவர் யார் ?
*லியோ-டால்ஸ்டாய்.*

21. உழவரின் நண்பன் எனப்படுவது எது ?
*மண்புழு.*

22. பவுண்டன் பேனா யாரால் கண்டுபிடிக்கப்பட்டது ?
*வாட்டர்மென்.*

23. இரத்தத்தின் வகைகள் யாவை ?
ஏ, பி, ஏபி, ஓ.

24. வெறி நாய்க்கடிக்கு மருந்து கண்டறிந்தவர் யார் ?
லூயி பாஸ்டர், 1882.

25. முதல் தமிழ்ச் சங்கம் எங்கு தோன்றியது ?
தென்மதுரை.

26. உலகின் மிகப்பெரிய கடல் எது ?
பசுபிக் பெருங்கடல்.

27. ஐம்பெருங் காப்பியங்கள் யாவை ?
சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

28. நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் யார் ?
இரவீந்திரநாத் தாகூர்.

29. மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்படும் உறுப்பு எது ?
கல்லீரல்.

30. சூரியனுக்கு வெகு அருகில் உள்ள கோள் எது ?
புதன்.

31. சூரியனுக்கு வெகு தொலைவிலுள்ள கோள் எது ?
புளூட்டோ.

32. உலகின் மிகப்பெரிய தீவு எது ?
கிரீன்லாந்து.

33. மகாத்மா காந்தியடிகளின் சுயசரிதை நூலுக்குப் பெயர் என்ன ?
சத்திய சோதனை.

34. நோபல் பரிசை ஏற்படுத்தியவர் யார் ?
நோபல்.

35. இந்தியாவின் நுழைவாயில் என்றழைக்கப்படுவது எது ?
பம்பாய்.

36. செஞ்சிலுவைச் சங்கம் யாரால் தோற்றுவிக்கப்பெற்றது ?
ஜோண்டு வான்ட்.

37. காற்றில் அதிக அடர்த்தியுள்ள வாயு எது ?
காபனீர் ஒக்சைட்.

38. நம் முகத்தில் எத்தனை எலும்புகள் உள்ளன ?
14 எலும்புகள்.

39. பென்சிலின் மருந்தைக் கண்டுபிடித்தவர் யார் ?
அலெக்சாண்டர் பிளேமிங்.

40. பேதி மருந்தாகப் பயன்படுத்தப்படும் படிகத்தின் பெயர் என்ன ?
மக்னீசியம் சல்பேட்.

41. தமிழில் இராமாயணம் எழுதியவர் யார் ?
கம்பர்.

42. இந்தியாவின் நீளமான நதி எது ?
கங்கை.

43. பரப்பளவில் பெரிய நாடு எது ?
கனடா.

44. ஒலிம்பிக் விளையாட்டுக்கள் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கிறது ?
4 ஆண்டுகளுக்கு ஒருமுறை.

45. கம்பியில்லாத தந்தியைக் கண்டு பிடித்தவர் யார் ?
மார்க்கோனி.

46. நமது உடலில் நீர் எத்தனை சதவீதம் உள்ளது ?
70 சதவீதம்.

௩ —

# ஓமத்தீ அல்லது யாகம் எனப்பெறும் வேள்வியின் மகிமை

இந்துக்களின் பாரம்பரியமான வேள்வி வளர்த்தல் (யாகம் அல்லது ஓமத்தீ) எனப்பெறும் சமய சடங்கு முக்கிய கோயில் விழாக்களிலும் பண்டிகைகளிலும், மக்கள் அதிக மாகக் கூடும் திருமணம். புதுமனை புகுதல், மற்ற குடும்ப நிகழ்ச்சிகளிலும் நடைபெற்று வருகின்றது.

இதன் தத்துவம் :

1. காற்று மண்டலத்தைத் தூய்மைப்படுத்துதல்.
2. நோய்க் கிருமிகளை நாசம் செய்து நோய்கள் பரவா மல் தடுத்தல்.
3. விசத்தன்மை வாய்ந்த வாயுக்களை முறித்தல்.
4. மூலிகைகளின் புகை, தூய்மை அடைந்த காற்று சிற் சில சாதாரண நோய்கள் குணமடைவதற்கும் உடல் நலம் கிட்டுவதற்கும் உதவுகிறது.

வேள்விக்குப் பயன்படும் (மூலிகைக் குச்சிகள்) சந்த னம், அருகம்புல், தர்ப்பைப்புல், வேம்பு, அரசன், மா, ஆலம், வன்னி, கருங்காலி, எருக்கன், முருக்கன், நாயுருவி, அத்தி, நெய், எள்எண்ணெய், உலர்ந்த பசுஞ்சாணம், கற் பூரம், சாம்பிராணி, மஞ்சள் தூள், நவதானியம் போன் றன.

இவ்வித பொருட்களை வேள்வி (ஓமத்தீ)யில் சேர்க்கும் போது உண்டாகும் புகை வீடு முழுவதும் பரவுகின்றது, அது வீட்டின் பல பொருள்கள் மீது படிகின்றது. மற்றும் வீட்டில் வியாபித்து இருக்கும் காற்றினைச் சுத்தப்படுத் துகின்றது. அப்புகையினை சுவாசிக்கும் ஒவ்வொருவருக் கும் நல்ல இதம் அளிக்கின்றது. நோய் உள்ளவர்களுக்கும் சுகம் அளிக்கின்றது.

மேற் கூறியவற்றை நிரூபிக்கும் வகையில் நிதர்சனமாக நடந்த - உலகுக்கே தெரிந்த நிகழ்ச்சியை இங்கே தருகி றோம்.

1984-ம் வருடம் டிசம்பர் மாதத்தில் நடந்த போபால் விஷவாயு விபத்து பல்லாயிரக் கணக்கான மக்களையும், உயிரினங்களையும் கொன்று சுடுகாடாக்கியது. இவ்வாறு சுற்றி உள்ள மக்களும் கால்நடைகளும் செத்துக்கொண்டிருக்கும்போது இரண்டு வீட்டினர் மட்டும் விஷ வாயுவினால் பாதிக்கப்படவில்லை. வீட்டின் உள்ளேயே — நலமுடன் — உயிருடன் இருந்தார்கள். இந்த அதிசய — வியக்கத்தக்க — உண்மைச் செய்தியை 'ஹிந்து' ஆங்கிலப் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

விச வாயுவினால் அவ்வீட்டார் பாதிக்கப்படாதது ஏன்? அவ்வீட்டிலுள்ளவர்கள் வழக்கமாக வீட்டில் 'ஓமத்தீ' எனப்படும் வேள்வியை நடத்தி வருபவர்கள். ஓமத்தீ படிமங்கள் வீட்டின் ஒவ்வொரு பாகத்திலும் இருந்ததால் விசவாயு அவர்களை உடனே பாதிக்கவில்லை.

பின்னர் அவர்கள் விச வாயு தாக்குகலை அறிந்ததும் உடனே ஹோமம் (வேள்வி) வளர்க்கத் தொடங்கி விட்டனர். அனைவரும் அதன் அருகிலேயே உட்கார்ந்து விட்டனர். ஓமத்தீயின் புகை வீடு முழுவதும் பரவியது. நச்சு வாயுவினை முறியடித்தது. அவர்களுக்கு அது ஒரு பாதுகாப்பு வளையத்தை போட்டுவிட்டது போலாகிவிட்டது. வேள்விப் புகையே அவர்களைத் தீங்கின்றி காப்பாற்றியது. வேள்விப் புகையின் மகிமையைக் கண்டு இந்த உலகமே அதிசயித்துப் போனது. அதைப்பற்றிய விரிவான ஆராய்ச்சியைத் தொடங்கியுள்ளார்கள்.

எனவே ஒவ்வொரு குடும்பத்திலும் வேள்வித் தீயினை வளர்த்து அனைவரும் உட்கார்ந்து பிரார்த்தனை செய்வது நல்லது.

மூலிகைக் குச்சிகளின் மூலம் ஏற்படும் புகையே நன்மை செய்யும் என்றால் மூலிகைகளை-நாம் அனுதினமும் வகையறிந்து உட்கொண்டு வந்தால் நோய் தடுககும் சக்தி நம் உடலுக்கு உண்டாவது உறுதி.

உடல் நலத்தையும் - உள நலத்தையும் காப்பதற்கு வேள்வி செய்வோம்! வாழ்க - வளமுடன்!.

ஈ —

(நிறுவனரின்
சிந்தனை)

# கந்தபுராண வரலாற்றில் ஐந்து பூத விளக்கங்கள்

சூரபத்மனும் சகோதரர்களான அறுபத்து மூன்று கோடி அசுரர்களும் காசிபர் என்ற முனிவருக்கும் மாயை என்கின்ற ஒரு பெண்ணிற்கும் பிறந்ததாக புராண வரலாறு கூறுகின்றது. இங்கே நாம் எமது சிந்தனையை வளர்த்து இதற்கான காரணங்களை அறிய முற்படுகின்றோம். இவன் எவ்வாறு பிறந்தான், என்ன நேரம் பிறந்தான், இவனுக்கு சிவபெருமான் அளவுக்கு அதிகமான வரத்தை ஏன் கொடுத்தார், அவ்வாறு வரம் கொடுத்த சிவபெருமானே எத்தனை வகையான அறிவுரை கூறும் முனிவர்களை தூதர்களாக அனுப்பியும், சூரன் எதையுமே கேட்க மறுத்தது ஏன்? இறுதியில் முருகனையே உருவாக்கி அவனிடம் சரணடையும்படி கேட்டபொழுதும் சூரன் தனது குணத்தை மாற்றவில்லை. இப் பிரபஞ்சத்தையே படைத்த ஈசனான சிவபெருமான் இச் சூரனை ஞானவழியில் அமைக்க முடியவில்லையென்றால் இதற்கு ஏதோ ஒரு பெரும் காரணம் இருக்க வேண்டும், இதை ஆராய்வதே எமது நோக்கமாகும். ஒவ்வோர் உயிரினங்களுக்கும் ஐந்துபூத விகிதாசாரம் வெவ்வேறாகவே அமைந்துள்ளது, அவ்வாறு அமைந்த ஐந்துபூத விகிதாசாரத்துக்கு அமையவே ஒவ்வோர் உயிரினங்களின் செயற்பாடுகள் அமைகின்றன. ஐந்துபூத விகிதாசார அமைப்பைக் கூட்டிக் குறைத்தாலன்றி வேறு எந்த விதத்திலும் உயிரினங்களின் செயற்பாடுகளை மாற்றியமைக்க முடியாது. நாலு சாம வேளைகளிலே சூரன் பிறந்ததாக புராண வரலாறு கூறுகின்றது, சாமவேளையில் பிறந்த சூரனாதலால் ஒளிப்பூத விகிதாசாரம் குறைவாக இருக்கலாம் என நாம் கருத இடமுண்டு.

தந்தையான காசிபர் சூரனை அறத்தின் வழியில் வளர்க்க விரும்புகிறார், தாய் அதற்கு இடம் கொடுக்கவில்லை, அசுரகுருவின் எண்ணப்படி கல்வி கற்று, அசுர அறிவை வளர்த்து, சொல்லமுடியாத கொடுமைகள் எல்லாம் புரிந்த காரணத்தினால் அவனது ஐந்துபூத விகிதாசாரத்திலுள்ள நல்லெண்ணத்துக்குரிய காற்றுப் பூத விகிதாசாரமும் நீதி நியாயத்திற்குரிய ஆகாயபூத விகிதாசாரமும் மிக மிக குறைந்துவிட்டன. அப் பூதக்கணக்கிற் குரியதாக, அதே அளவுக் கணக்கில நிலப் பூதமும், நீர்ப்பூதமும் செறிந்துள்ளதை காண முடிகின்றது. இவனிடமுள்ள குறைந்த பூதங்களான காற்று, ஒளி, ஆகாயம் ஆகியவை கோடிக் கணக்கான அணுக்கணக்கில குறைந்துள்ளதை காண முடிகின்றது. ஆனால் ஆசைப் பொருளுக்குரிய பூதங்கள் கூடியதும் இவரது பேரா

சையை எந்தக் கடவுளாலும் மாற்றமுடியாது. ஆகவே சிவபெருமான் தனது நெற்றிக்கண்ணினின்றும் புறப்பட்ட தீயில் ஞான முருகனை உருவாக்கி சூரனை அழிக்கிறார். இங்கே நாம் சிந்தனையை மேலும்வளரவிடுகிறோம். இப் பிரபஞ்சத்தை படைத்த சிவபெருமானாலேயே அவனது எண்ணத்தை மாற்றியமைக்க முடியவில்லை. அவனது சகோதரர்களான அசுரர் களது குணத்தையும் மாற்ற முடியவில்லை. இதற்கு ஏதோ ஓர் அடிப்படைக் காரணம் இருக்கவே வேண்டும். கொடுங்கோன்மை காரணமாக அவனது ஆன்மாவில் ஆசைப் பொருளான நீர்ப் பூதம் அள வுக்கு மிஞ்சிக் கூடியே இருந்த காரணத்தினால் அவன் அவரது சொல் லையும் கேட்கமாட்டான் என்பது புலனாகின்றது. ஆகவே அவனை அழிப்பதற்காக ஞானப்பொருளான முருகனை உருவாக்கி அந்த ஞான ஒளிப்பூதம் ஏராளமாயுள்ள முருகனால் அவனது நீர்ப்பூதத்தை ஆவியாக்கி குறையச்செய்து அவனது அகங்காரம் அழிக்கப்படுகிறது. ஆகவே ஐந்துபூத விகிதாசாரத்தின் செயற்பாடுகளே இப்பிரபஞ்சத்திலுள்ள சகல செயற்பாடுகளையும் ஆக்கியும் அழித்தும் வருகின்றன என்பது நன்கு புலனாகின்றது. ஞான ஒளியினால் அழிக்கப்பெற்ற சூரனது ஆன்மாவி லுள்ள ஐந்துபூத விகிதாசாரம் நாலறிவுள்ள பட்சி வர்க்கத்திற்குரிய தாய் அமைந்ததால் சூரன் சேவலும் மயிலும் ஆகினான் எனக் கூறப் பெற்றது சரியென உணரமுடிகிறது,

சிவபெருமான் நெற்றிக்கண் அக்கினியை சரவணப்பொய்கையில் விட்டே முருகன் உருவானான். இது ஏன்? சிவபெருமான் முருகனை உருவாக்கியிருக்கலாமே அல்லது சிவபெருமான்போல் முருகனும் தானே உருவாகியிருக்கலாமே. இவற்றை ஆராய முற்படுகிறோம், எந்த ஒரு உயிரினமும் உருவாக ஐந்துபூத அணுக்கள் தேவை. சிவபெருமான் நெற்றிக் கண்ணிலுள்ள தீயானது நீருடன் சேர்ந்தாலே கரு உருவாக முடியும். சிவபெருமான் உண்மைப்பொருள் ஆன தீ, முருகன் ஞானப் பொருளான ஒளி, தீப்பொருளுடன் ஒளிப்பொருளைத் தவிர வேறு எதுவும் சேரமுடியாது, சிவபெருமானுக்கு ஞானத்தை உபதேசித்தவன் முருகன். ஒளி தீயை வலம் வர முடியாது, காற்றே தீயை வலம்வர முடியும். இக்காரணங்களால் காற்றான விநாயகன் தீயான சிவபெரு மானை வலம் வந்து மாங்கனியைப் பெற்றதாக கூறப்பெற்றுள்ளது. காற்று இருந்தால்தான் தீ எரியமுடியும் — தீயுடன் ஒளி சேர முடியும். இவற்றின் உண்மைகளைக் கண்டறிந்து அவற்றைக் கூறவேண்டியது எமது கடமை.

(தொடரும்)

— ௪ —

## மாயை கௌவிய கருத்துலகம்:

# எங்களுக்காக நாங்களே சிந்திக்க வேண்டும்

— மு. திருநாவுக்கரசு —

மனித குலத்தின்மீது ஆதிக்கம் செலுத்துவதற்குரிய முக்கிய ஆயுதமாக தொடர்புச் சாதனங்கள் காணப்படுகின்றன. தொடர்புச் சாதனங்கள் மீது தமது பிடியை வைத்திருப்போர் மனிதகுலத்தின் மீது தமது பிடியை வைத்திருப்பது இலகுவானதாய் உள்ளது. கைத்தொழிற் புரட்சி இரண்டாம் கைத்தொழிற் புரட்சி, (கணணி இயந்திர மனிதன்) தொடர்புசாதனப் புரட்சி என இயந்திரமயம் சம்பந்தப்பட்ட முக்கிய புரட்சிகள் எல்லாம் மேற்குலகிலேயே தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன. தொடர்பு சாதனங்களில் ஏற்பட்டுள்ள புரட்சியால் மேற்குலகம் தனது எண்ணங்களையும், விருப்பங்களையும் பரந்த உலகின்மீது திணித்து தனது அபிலாசைகளை இலகுவாக ஈட்டிக் கொள்கின்றது.

தொடர்பு சாதனங்கள் மூலம் ஒரு பெரும் கலாச்சாரச் சுரண்டலை மூன்றாம் உலக நாடுகள் மீது மேற்குலம் நடத்துகின்றது. கலாச்சாரச் சுரண்டலில் சிந்தனை என்பது ஒரு தலையாய அம்சம். இயல்பானதும், இருக்க வேண்டியதும், பொருத்தமானதுமான சிந்தனைகளுக்குப் பதிலாக ஒரு மாயா சிந்தனையை வெகுஜன தொடர்பு சாதனங்களின் மூலம் இவர்கள் உருவாக்கி விடுகிறார்கள். செய்மதியின் வருகை இன்று தொலைத் தொடர்பில் பெரும் பாச்சலை ஏற்படுத்தியுள்ளது. சகல வெகுஜன தொடர்புச் சாதனங்களுக்கும் இன்று அது மையமாகிவிட்டது. செய்தி–தகவல் சேகரிப்பு, செய்தி–தகவல் பரவல், செய்தி–தகவல் கட்டுப்படுத்தல், செய்தி–தகவல் திரிப்பு ஆதிய அனைத்தும் இன்று தொடர்பு, வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் மூலம் மேற்குலகின் கைகளில் உள்ளன.

திரைப்படம், தொலைக்காட்சிப்படம், மற்றும் கலை இலக்கியம், பண்ட விளம்பரம், செய்திகள், தகவல்கள், ஆய்வு நூல்கள், ஆய்வுக்கான மூலாதாரங்கள் போன்ற சகல அம்சங்களுக்கு ஊடா

கவும் மேலைத்தேச நோக்கு நிலையிலான ஒரு மேலைத்தேசக் கருத்துப்படிமம் எம்மை அறியாமலே எம்மிடம் உருவாக்கப்பட்டுவிடுகின்றது. இவற்றால் சிந்தனை, கலாச்சாரம், சமூக–அரசியற் போக்கு என்பன நிர்ணயிக்கப்பட்டுவிடுகின்றன, ஒரு வகையில் இவைகள் அபினிகள் ஆகும். இச் சாதனங்கள் மூன்றாம் உலக மக்களை தன்னுணர்வின்றிச் செயற்பட வைக்கின்றன.

''ஓர் அடிமை தான் அடிமையாய் இருக்கிறேன் என்பதை உணர்ந்து விட்டானென்றால் அவன் அரைவாசிச் சுதந்திரம் அடைந்து விடுகிறான்." என்றொரு கூற்றுண்டு. இவ்வாறு மேலைத்தேச தொடர்புச் சாதனங்களினால் தாம் திசைதிருப்பப்படுகிறோம் என்பதை மூன்றாம் உலக மக்கள் உணர்ந்து கொள்வார்களேயானால் அரைவாசிப்பிடி தளர்ந்ததற்குச் சமன்.

இவற்றின் அர்த்தம் மேலைத் தேசத்தின் விஞ்ஞானத் தொழில் நுட்ப சாதனைகளை நிராகரிக்க வேண்டும் என்பதில்லை. மேலைத் தேசத்தின் செருப்புக்கேற்ற காலாய் மூன்றாம் உலகம் வெட்டப் படக்கூடாது. மாறாகக் காலுக்கேற்ற செருப்பாய் ஒரு சுய தெரிவு எல்லாவற்றிலும் இருக்க வேண்டும். இவற்றிற்கான ஆப்பு சிந்தனைத் துறையில் இருந்தே உருவாக வேண்டும்.

''கற்பனை நிறைந்த காவிய இரசனை மிக்க மக்கள்" ஒன்று இந்திய உபகண்ட சமூகத்தைப்பற்றி 19 ஆம் நூற்றாண்டின் முக்காற் பகுதியில் ஒரு சிந்தனையாளன் கூறினார். தென்னாசிய மக்களின் பொதுவான சிந்தனைப் போக்கில் மாயையும் கற்பனையும் அதிகம் கோலோச்சுவதுண்டு. ஆனால் தென்னாசியப் பிராந்தியத்தில் வாழும் சிறிய மக்கள் கூட்டமான தமிழீழ மக்கள் கடந்த ஒரு தசாப்தத்தில் பல்முனைத் தாக்குதல்களுக்கும், பல்வகை அனுபவங்களுக்கும் உட்பட்டவர்கள் என்ற வகையில் இப் பிராந்தியத்தில் உள்ள ஏனைய மக்கள் கூட்டத்தவரையும் விட அதிக விழிப்புணர்வு கொண்டவர்களாய் உள்ளனர். பட்ட அனுபவமே இதற்கான பிரதான காரணம். இது அரசியற் துறைக்கே பிரதானமாகப் பொருந்தும்.

தென்னாசியாவின் பொதுவான சிந்தனைப் போக்கில் கற்பனையும், மாயையும், அதீதப் போக்கும் அதிகம் வேரூன்றி உள்ளது. மேலைத் தேசத்தவர்களினால் இம் மக்கள்மீது மூடிப் போர்க்கப் பட்டுள்ள சிந்தனை மாயையும், இம் மக்களிடமே காணப்படுகின்ற கற்பனைப் போக்கும் மற்றும் பல்வழிகளினாலும் உருவாகும் அதீதப் போக்கும் உடைக்கப்படுவதே இப் பிராந்திய மக்களின் விமோசனத்திற்கான அடிப்படை நிபந்தனைகளாகும்.

மூன்றாம் உலக நாடுகளின் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு அவர்களின் நோக்கு நிலையிலான ஆய்வுகள் சிறப்பான வளர்ச்சியை அடைய வேண்டும். இருக்கும் பிழையான கருத்துப் படிமம் உடைய வேண்டும். சிந்தனையில் உயிர்த் துடிப்பும், செயல் பூர்வமான வழிகாட்டலும் இருக்க வேண்டும். ஆய்வு என்பது மன விருப்பத்தை கருத்தாக்குவதல்ல ; அப்படியாயின் அது ஒரு கற்பனைதான். காணப்படும் யதார்த்தத்தை உள்ளபடியே கண்டறிவதும், அந்த யதார்த்தத்தை வைத்துக்கொண்டு உருவாக்கக்கூடிய நல்லவை எவை என அடையாளம் காண்பதும், அந்த நல்லவற்றை உருவாக்க யதார்த்தத்தில் எவ்வளவு தூரம் இடமுண்டு என்பதைக் கண்டறிவதுமே ஆய்வாகும். அதாவது இயற்கையைப் பற்றியதும், இயற்கையின் நியதியைப் பற்றியதுமே ஆய்வாகும். மனத்தின் கற்பனா விருப்பு வெறுப்புக்கு அப்பால் காணப்படும் உண்மையான நியதியை மக்களின் நன்மைக்காக எவ்வளவு தூரம் பயன்படுத்தலாம் என்பதைக் கண்டறிந்து விளக்கும் ஒருவன்தான் அமரத்துவமுள்ள சிந்தனையாளனாய் நிலைப்பான்.

ஒருபுறம் மனிதனது நடத்தையிலும், தேவையிலும், வாழ்விலும் சமூகத்தன்மை இடையறாது அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. மறுபுறம் ஆய்வில் சிறப்புத் தேர்ச்சி என்பதன் பெயரில் தனித் தன்மை அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. அதாவது பகுப்பாய்வுகள் அதிகரிக்கின்றன; ஆனால் தொகுப்பாய்வுகள் அருகுகின்றன. இது பண்ட உற்பத்தி வளர்ச்சியின் தவிர்க்க முடியாதவிளைவு என்றொரு கருத்துண்டு. ஒரு தொகுப்பான சிந்தனைதான் ஒரு முழுவடிவத் தாக்கத்தையோ அல்லது கருத்தையோ தரவல்லது. அல்லாத இடத்து அது யானை பார்த்த குருடர்கள் கதைதான்.

மூன்றாம் உலக நாடுகளின் சிந்தனையிலும், கருத்துலகிலும் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படவேண்டும். ஒரு காலத்தில் கற்பனையின் மத்தியிலும் பெரும் சிந்தனையாளர்களைப் படைத்தது ஆசிய மண். எனவே அதனால் முடியாததென்றில்லை. ஆனால் அதன் சிந்தனைத் திறன் தற்போது மேலைத் தேசத்தால் கெடுக்கப்பட்டுள்ளது. ஆசிய ஞானிகள் ஒருபுறம் கற்பனைத் தன்மையுள்ளவர்களாயும், மறுபுறம் இயற்கை விதிகளை ஆராய்ந்தவர்களாயும் காணப்படுகிறார்கள்.

எமது இன்றைய தேவை கற்பனைகளைக் கைவிட்டு மேலைத் தேசத்தின் கருத்தாக்கிரமிப்புக்கும், திரிபுகளுக்கும் ஆட்படாது எத்தகைய இடர்களையும் தாண்டி எமக்குப் பொருத்தமான கருத்துக்களையும், எண்ண ஓட்டங்களையும் உருவாக்க வேண்டும் என்பதுதான்.

நன்றி: ஈழநாதம்

— உண்மையே கடவுள் —

# வாடிக்கையாளரின் வேண்டுகோளும்

# எமது நிலைப்பாடும்........

வெள்ளி வளவு,
அல்வாய் வடக்கு,
பருத்தித்துறை.
28-07-1992.

நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

ஐயா! தாங்கள் தான, தருமங்கள் செய்யலாம். அது பாராட்டுக்குரியது. ஆனால் தங்கள் நிறுவனத்தின் வேலை நிமித்தம் எரிந்த உமிச் சாம்பலால் வீதியால் செல்வோரின் கண்களிலும், தங்களின் நிறுவனத்தின் சேவையை நாடி வருவோரின் கண்களிலும் கடும் காற்றின் நிமித்தம் சாம்பல் கண்ணில் விழுந்து தொந்தரவாய் இருப்பதால் இதனை ஒதுக்குப்புறமாய்க் கொட்டியோ அல்லது பற்பொடித் தொழிலை ஆரம்பித்தோ இதற்குப் பரிகாரம் காணுமாறு வேண்டுகிறேன்.

இப்படிக்கு,
(ஒப்பம்) V. செல்லத்துரை

தங்களின் மேற்படி கடிதம் தொடர்பான எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த விரும்புகின்றோம். இப்பிரச்சினை காரணமாகவே வடக்குப் புறச்சுவர் உயர்த்திக் கட்டியிருந்தோம். நாட்டின் அசம்பாவிதத்தினால், இம்மதில் உடைக்கப் பெற்றமையினால் தற்போது ஓலையினால் கட்டி உள்ளோம். வேலியை உயர்த்திக் கட்டினால் காற்றினால் சாய்ந்து வீழ்த்தப்படுகின்றது. இதனால் முழுமையாக உமிச்சாம்பல் கடும் காற்றின்போது வெளியேறுவதை எம்மால் தடுக்க முடிவதில்லை.

மேலும் பல ஆலயங்களைச் சேர்ந்த அன்பர்கள், பற்பொடி தயாரிப்பாளர்கள் எமது நிலையத்தில் வந்து திருநீற்றை அள்ளிச் செல்வதால், அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய உமியை

நீறாக்க வேண்டிய தேவைகள் ஏற்படுகின்றது. இத் தேவைகளை நிறைவேற்ற முற்படும்போது, எமது சக்திக்கப்பாற்பட்ட நிலையில் தோன்றும் கடும் காற்றினால் இப் பிரச்சினைகள் தோன்றுகின்றது. தங்களைப் போன்ற வாடிக்கையாளருக்கும், பாதசாரிகளுக்கும் ஏற் படும் சிரமங்களுக்கு நாம் மனம் வருந்துகின்றோம்.

இப் பிரச்சினைக்குத் தினமும் ஆலைத் தொழிலாளரும் நாமும் முகம் கொடுக்க வேண்டியவர்களாய் உள்ளோம். மக்களின் பிரதான உணவான அரிசி தயாரிக்கும்போது இவ்வகையான சிரமத்தைச் சந்திக்க வேண்டியவர்களாய் நாம் உள்ளோம். மேலும் மக்களின் தேவையை உணர்ந்து உமி அடுப்புக்களையும், சிறு உமியையும் காலம் குறித்து மக்களுக்கு வழங்குவதோடு, நிலையத்தின் முன் உள்ள தொட்டியிலும் சாம்பலும், திருநீறும் நிறைத்து மக்கள் பாவனைக்கு எடுத்துச் செல்ல வைத்துள்ளோம். இவற்றை எடுத்துச் செல்லவரும் சிறு பிள்ளைகளின் பொறுப்பற்ற செயல்களால் வெளி யில் கொட்டுண்ட நீறும் – சாம்பலும் பாவனையாளர்களுக்கும் பிரச் சினையைத் தோற்றுவிக்கலாம். நாம் எவ்வளவு அவதானமாய்ச் செயற்பெற்றாலும் எம்மையும் மீறி நடப்பதை இட்டு மனம் வருந்து கின்றோம்.

பற்பொடி – திருநீறு தயாரிக்கும் திட்டம் எம்மிடம் இருப்பி னும் கட்டிட வசதிகளை ஏற்படுத்த முடியாத நிலையில் மேற்படி திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் உள்ளோம் என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருவதோடு, தங்களின் வேண்டு கோளை நிறைவேற்ற முயற்சி செய்கின்றோம். நன்றி.

**— நிறுவனர் —**


கடவுளை! (உண்மை) நினையாதவன் சாவு வருகிறபோது கடவுளை நினைக்கிறான். கண்ணிலே நீர் வருகிறது. மனைவி, மக்களைப் பிரிய முடியாமல் அழுகிறான் என நாம் நினைக்கிறோம். உண்மை அதுவல்ல. உண்மையான இறை வனை ஆயுள் உள்ளபொழுது உணரவில்லையே என்றுதான் அப்பொழுது அழுகிறான். பெண்ணும், பொருளும், போக மும் கைகூடிவிட்டால் அவன் கடவுளை நினைப்பதற்கு நேரம் ஏது. உண்மையான அறநெறியைச் சிந்திக்க நேரம் எங்கே அவனுக்கு.

உ—

# எனது பார்வையில் நிறுவனர்

— வ. ச. செல்வராசா —

நிறுவனர் அவர்கள் தன்வாழ்க்கை வரலாற்றை அறத் தமிழ் ஞானத்தில் எழுதி வரும் இவ்வேளை ''எனது பார்வையில் நிறுவனர்'' என்ற கட்டுரையை எழுதுவது நலமென்ற நம்பிக்கையோடு எழுத முற்படுகின்றேன். வயதோ எழுபது. சுகபோக வாழ்க்கை வாழ்வதற்குத் தேவையான சகல வசதிகளும் கொண்டவர்தான் நிறுவனர். ஆனால் சுகபோக வாழ்க்கையை வாழாது எளிமையாய் – சிக்கனமாய் வாழ்ந்து, தனது இரு கையும் செயல்பெற இயலாத நிலையிலும் அடுத்தவர் துன்பத்தைக் கண்டு அவர்களுக்கு எவ்வகையில் உதவியளிக்கலாம் என்ற சிந்தனையோடு வாழ்ந்து, தனது சொத்துக்களை எல்லாம் தரும சாதனம் மூலம் தருமப் பணிக்கு ஈந்து தனது சிந்தனைகளை எழுத்தாய் வடித்து— ஏக்கம் நிறைந்த நினைவோடு காலம் கழிப்போர்க்கு ''உழைப்பால் உயர்ந்தவன் நான். ஒருவேளை உணவுக்கும் மாற்றுடைக்கும் வழியின்றி வாழ்ந்தவன் நான். எனது உயர்விற்கு என் கடின உழைப்புத்தான் காரணம்'' என்று பெருமையாகச் சொல்லி எல்லோரும் வாழ, வளர வழி காட்டும் கலங்கரை விளக்கமாய்த் திகழ்பவர்தான் எமது நிறுவனர்.



தான் முன்னர் ஏழ்மையில் இருந்த நிலையை, வாழ்ந்த வாழ்க்கையை மறந்து பணத்தைத் தேடிய பின்னர் ஏழ்மையில் வாடும் வசதி குறைந்தவர்களை விமர்சிக்கும் இந்த உலகில்,

உதிரம் பிழிந்து உழைப்பால் உயர்ந்து, ஆலை அதிபதியாய் வாழும் இன்றைய நிலையிலும், வாழ்வின் ஆரம்பத்தில் மூடை சுமந்து காலம் கழித்ததை பெருமையாக இன்றும் – சொல்லியும் – எழுதியும் வரும் இவர் பெருமனிதர்தான். மூடை சுமந்தவர்கள் எல்லோரும் முதலாளியாவதும் இல்லை. முதலாளியானவர்கள் எல்லோரும் அறப்பணிகளில் ஈடுபடுவதும் இல்லை. பயன் உள்ள சிந்தனையை எழுத்தில் வடிப்பதும் இல்லை.

சொத்துச் சுகம் உள்ள பல தனவந்தர்கள் எல்லாம் தாண்டிக் குளம் தாண்டி தன் வாழ்வை வளமாக்க ஈழத்தைவிட்டு வெளியேறும் இன்றைய நிலையிலும் ''யப்பான் நாட்டைப் பார் அந்த நாட்டை அணுகுண்டு போட்டு சீரழித்தார்களே அவர்களது விடா முயற்சியாலும், உடல் உழைப்பாலும் நிமிர்ந்து வளர்ந்து எம்மவர்க்கெல்லாம் எவ்வளவு உதவி வேண்டும் என்று கேட்டு உதவி செய்கிறார்களே அந்த மனநிலை அந்த சமுதாய அமைப்பு ஈழத்திலும் உருவாக வேண்டும். ''என பெருமையாகக் கூறி இந்த மண்ணுக்காய் – மக்களுக்காய் – எண்ணிச் செயல் பெறும் இம்மனிதரை எப்படி வர்ணிப்பது.

தான் நினைத்ததைச் சாதிப்பவர்தான் எமது நிறுவனர்.

''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.''

என்ற பொய்யா மொழியின் குறள் போல யார் யார் எதைக் கூறினாலும் தமது முடிவில் நின்று மாறாது துணிந்து வேகத்துடன் செயல் புரியும் பழக்கமுடையவர். இவரது செயற்பாடுகளுக்கும், அவரது சிந்தனைகளுக்கும் இடையே யார் வந்தாலும் வெட்டு ஒன்று துண்டு இரண்டாய் ஒழிவு மறைவு இன்றி தன் மனதில் பட்டதை சொல்லி முடித்து விடுவார். தான் சொன்னது அடுத்தவருக்குப் பிடிக்குமா பிடிக்காதா என்று அவர் கவலைப்படுவதும் இல்லை. அந்த நிகழ்வும் அத்தோடு சரி. அடுத்த நிமிடம் ஒரு புதிய அத்தியாயத்தில் பிரவேசிப்பவர் போல் பேச்சைத் தொடங்குவார்.

தமிழ் மொழி ஒரு தெய்வ மொழி. அது ஒரு பொக்கிசம். அதில் அளவிட முடியாத நிறைய விசயம் இருக்கின்றது. இப்பெருமை மிக்க மொழியில் நாட்டம் செலுத்தாமல் ஆங்கிலத்தில் எழுதுவோரையோ, பேசுபவரையோ இவர் விமர்சிக்கப் பின்நிற்பதே

இல்லை. நாம் எமது மொழியில் எழுதினால்தான் எமது மொழி வளரும். நாமும் வளர்வோம் – வாழ்வோம்” என்று ஆணித்தர மாய்க் கூறுவார். வெளிநாட்டார் எல்லோரும் தன் தன் தாய் மொழியை மதிக்கும் போது ஏன் தமிழர் மட்டும் பிற மொழியில் நாட்டம் செலுத்த வேண்டும். அரைகுறையாய் ஆங்கிலம் கற்ற மாணவர்கள் ஈவினிங் கிளாசா – மோனிங் கிளாசா – டேக் கிளாசா – ரென்தேட்டிக்கு நான் வாறன் என்று தமிழ் இடையே ஆங்கிலச் செருகல் தேவைதானா ? இம்மாதிரியான மனநிலைகள் வளரத் தான் வேண்டுமா ? என வினாவுவார். சிந்திக்க வேண்டிய – சீர் தூக்கிப் பார்க்க வேண்டிய விடயம். இவைக்கு காலம்தான் பதில் சொல்லும்.

பொய் சொல்லக் கூடாது பாப்பா என்றும் புறம் சொல்லல் ஆகாது பாப்பா என்றும் பாரதியார் கூறியதுபோல பொய் பேசு தலை அவர் அறவே விரும்ப மாட்டார். நீங்களும் பொய் பேசாது வாழப் பழகுங்கள். உங்களுக்கும் நல்ல எதிர்காலம் உண்டு என மற்றவர்களுக்கும் உண்மையின் பெருமையை எடுத்துரைக்க பின் னிற்பதே இல்லை. இவரது தொழில் நிறுவனத்தோடு தொடர் புள்ள பல நெல் வியாபாரிகள் வருவார்கள் போவார்கள் – இவர் களுக்கு எந்த விதத்திலும் பொய் பேசாது பொருளை விலைபேசி வாங்கி ஆலையை இலாபகரமாக நடத்தி – கடந்த வருடம் மட்டும் 10 இலட்சத்து 89 ஆயிரத்துக்கு மேல் அறப்பணிக்கு செலவிட்டுள் ளார் என எடுத்துரைப்பதில் பெருமை அடைகிறோம்.

“உண்மையே கடவுள்” என்ற கொள்கை வழிநின்று மற் றவரைத் தாழ்த்தி தான் உயரும் எண்ணம் இல்லாது எல்லோரும் வாழவேண்டும் என்ற விசாலமான எண்ணத்தைக் கொண்டவர் நிறுவனர் அவர்கள். செய்யும் தொழிலே தெய்வம் அதில் திறமை தான் நமது செல்வம் என்றார் ஓர் அறிஞர். மனிதர்களே சிறந்த ஆலயம் அதைவிட்டு கடவுளை வெளியே தேடுவதில் பிரயோசனம் இல்லை என்றார் விவேகானந்தர். இதேபோல நிறுவனர் கூறு வார் ஆண்டவன் ஆலயத்தில் இல்லை. எம் மனதினுள்தான் இருக் கின்றான். நாம் பொய்யையும், புலாலையும், மதுவையும் சுவைத் துக்கொண்டு அப்பனே சிவசிவா என்பதில் அர்த்தமில்லை என ஆணித்தரமாய் எடுத்துரைப்பார்.

காலை 7 மணிக்கு தொழிலகம் புறப்பட்டு மாலை 7 மணிக்கே மறுபடியும் வீடு திரும்புவார். இது தினசரி நடைமுறையாகும். ஆலைக்கு வருவதும் போவதுமே தவிர வெளியே எவ்விடத்திலும் செல்வது மிகமிகக் குறைவு என்றே சொல்லலாம். இவை பற்றி விளக்கம் அளிக்கையில் எனது பிள்ளை செத்தபோதும் நான் அன்றைய தினம் மட்டுமே விடுமுறை எடுத்திருந்தேன். அடுத்த நாள் நான் தொழிற்சாலையில் இருப்பேன் " என பெருமையாகச் சொல்வார்." நான் செய்யும் தொழில் அப்படியானது மேடையில் நெல்லைக் காயவைத்துவிட்டு நான் வெளியே சென்றால் நெல்லைப் பதமாக காயவைத்து குறுனைல் இல்லாது அரிசியைக் குற்ற முடியாது, குறுணல் அரிசியைத்தான் நான் விற்பனைக்கு வைக்க முடியும். என்னை நம்புபவர்களுக்கு நான் துரோகம் செய்தவனாய் மாறி விடுவேன் என்று சதா கடமைக்காய் குரல் கொடுத்துக் கொண்டே இருப்பார். யார் என்றாலும் கடமையிலே இருந்து தவறினால் நான் நெருப்புத்தான். என்னாலை பொறுக்க முடியாது என ஆவேசத்துடன் கூறுவார். இக் கூற்றின் மூலம் நிறுவனர் கடமையில் எவ்வளவு மதிப்பு வைத்துள்ளார் என்பதை உய்த்துணர முடிகின்றது அல்லவா.

ஆலை சம்பந்தப்பெற்ற அத்தனை வேலைகளும் இவருக்கு கைவந்த பாடம். அனுபவமே சிறந்த மருத்துவம் என்பார்கள். அதுபோல ஆலைத் தொழிலில் ஊறித் திழைத்தவர்தான் நிறுவனர் அவர்கள். ஆலையந்திரம் பழுது பார்ப்பது அதற்கு வேண்டிய தொழில் நுட்ப அறிவை வழங்குவது அவருக்குக் கைவந்த கலை தான். தொழில் நுட்பத் துறையில் இங்கு வெளியாருக்கு வேலையே இல்லை. மற்றவர்கள் தனது எண்ணத்துக்கு மாறாய்ச் செயற்படும் போது எந்த வேலை என்றாலும், இரு கையும் இயங்க முடியாத இன்றைய நிலையிலும் விடு..... விடு..... என்னெட்டை விடு...... என்று தானே செய்ய முயற்சிப்பார். அவரது வேகத்திற்கு எவராலும் ஈடு கொடுக்க முடியாது. நாம் கணணியால் கணக்கை கூட்டவோ, பெருக்கவோ முற்படும் நேரத்தில் மனதாலே படபட என்று பார்த்து எம்மை எல்லாம் திக்குமுக்காடச் செய்து விடுவார். இவரது உயர்விற்கு கணக்கு வைக்கும் முறையும் ஒரு காரணம் எனக் கணிப்பிடலாம்.

இந்நாட்டில் அறம் வளர வேண்டும் – வாழவேண்டும் என்ற பெரு விருப்போடு நீதி நூல்களை "அறநெறி மணிகள்" என்ற பெயரில் அச்சுப் பதிப்பித்து இளம் சிறுவர்களுக்குப் போதித்து அதில்

தேர்வு வைத்து வெகுமதியாய் பல இலட்சம் ரூபாயை பரிசில் தொகையாக வழங்க எண்ணி அதற்காக நாளும் பொழுதும் பெரும் நேரத்தை ஒதுக்கிச் செயல்பெற்றார். ஆனால் கடந்த ஆடி மாதம் 18-ம் திகதி நடைபெற்ற தேர்வு அவருக்குப் பெரும் ஏமாற்றத் தைக் கொடுத்தது. காரணம் பெரும்பாலான மாணவர்களும், ஆசி ரியர்களும் அக்கறை செலுத்தவில்லை. தான் போட்ட கணக்கு எவ்வளவு தவறிவிட்டது என்றதும் தவித்தார். மனம் தாளாது வெதும்பினார் – வேதனையுற்றார். ''எவ்வளவு நன்றிகெட்ட சமூக மடா. புத்தகத்தை அச்சடித்து பாடசாலை தோறும் கொண்டு சென்று கொடுத்து – தேர்வுக்கு நாள் குறித்து – அதை அறிவித்து – தேர்வை திறம்பட நடாத்த மேற்பார்வையாளரைத் திரட்டி – தேர்வுக்கான விண்ணப்பப் பத்திரத்தை தயாரித்து – அச்சுப் பதிப் பித்து .....” அப்பப்பா...... எவ்வளவு வேலை செய்த எனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும். என்று வாய்விட்டுப் புலம் பினார்.” இவ்வளவையும் எதற்காகச் செய்தார். தான் வாழவா செய்தார். நிதியம் வாழவா செய்தார்..... இல்லையே. அறநெறிக் கல்வி இளம் சிறார்கள் உள்ளத்தில் பதிந்து நல்ல ஒரு சமதர்ம சமுதாயம் தோன்றிடவே அயராது உழைத்த பெரியவருக்கு அதி பர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் ஒத்துழைத்தார்களா என்ற கேள்வியை எழுப்புவதைத் தவிர எம்மால் எதையும் செய்ய முடியாது.

இன்று விநாயகர் தரும நிதியத்தின் பெயர் எங்கும் பேசப் பெறும் ஒன்று. அதன் பெருமைகள், செயற்பாடுகள், சிக்கனம் – சமத்துவம் – உடலுழைப்பு என்ற கோட்பாடுகள் எவரும் அறிந்த ஒன்றாகும். இத்தனைக்கும் வித்திட்ட பெருமை நிறுவனரையே சாரும். இந்த தாராள எண்ணத்துடன் பயன் கருதாது செயற் பெறும் பெருமனிதரின் செயற்பாட்டை நினைக்கையில் நெஞ்சம் இனிக்கின்றது. இவ்வேளை ஒரு அன்பர் எழுதிய கடித வரிதான் எனக்கு ஞாபகம் வருகின்றது. ''இவ்வகையான மேலான பணிகள் மூலம் ஐயா அவர்கள் உழைத்துக் கொண்டிருக்கையில் நாங்களும் ஏதேதோ (பாவத்தை) உழைத்துக் கொண்டிருக்கின்றோம்.” என அர்த்தபுஸ்டியுடன் எழுதிய வார்த்தையை எண்ணிப் பார்க்கையில் நிறுவனரின் செயற்பாட்டின் பெருமையை உணர முடிகின்றது.

அறத் தமிழ் ஞானம் – ஆத்ம சிந்தனை – மருத்துவக் குறிப்பு – சிறுவர்களுக்கான அறம் வளர் இளம் தமிழ் போன்ற இன்னோ ரன்ன சிந்தனை வெளியீடுகள் யாவரும் அறிந்த ஒன்றாகும். இவ் வளவையும் கையில் உள்ள பணத்தில் இருந்து எடுத்துச் செல

வழிக்கவில்லை. அரிசி ஆலையை இயக்கி தரமான அரிசியை உற்பத்தி செய்து அதன் வருவாயைக் கொண்டு அளவறிந்து அறப் பணிகளைச் செய்துவரும் நிறுவனரின் மதிநுட்பத்தையும், அநுபவ ஞானத்தையும் பின்பற்றி உயர்வடைய நிறுவனரின் வாழ்க்கை வரலாறு வழி சமைக்கும்.

பயன் கருதாப் பணியாக பல நூல்களை வெளியிட்டு வரும் நிறுவனர் தமது அரிசி ஆலைபற்றிய எவ்வித விளம்பரத்தையும் வெளியிடுகின்றாரா என்றால் இல்லை என்ற பதில்தான் எவரது வாயிலும் இருந்து வெளிவரும். பலனை எதிர் பாராது செயல்பெறும் நிறுவனர் கூறுவார் "அவன் சொல்கின் றான் நான் செய்கின்றேன். அவன் தருகின்றான் நான் செலவழிக் கின்றேன். எனிமேல் எனக்கு பிறப்பு வேண்டாம். இந்தப் பிறப்பை அறுப்பதற்கான ஆரம்ப நடவடிக்கையே நான் மேற் கொள்கின் றேன்" என்று அடிக்கடி கூறுவார்.

உதவி என்று எங்கு சென்றாலும் இப்ப வசதியில்லை. பின் னர் பாப்பம் என்று இழுத்தடிப்பவர்களையே நாம் தினம் தினம் காணுகின்றோம். இதுதான் யதார்த்தமான உண்மைநிலை. ஆனால் இவரோ புதுமையானவராய் - எதிலும் புதுமை படைப்பவராய்ச் செயற்படுகின்றார். நாட்டில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கையால் வதிவிடங்களைவிட்டு வெளியேறிய தீவகப் பகுதி மக்கள் என்றால் என்ன - வலிவடக்கு மக்கள் என்றால் என்ன - வல்வெட்டித்துறை மக்கள் என்றால் என்ன - இந் நடவடிக்கையால் ஊனம் உற்றவர் கள் என்றால் என்ன தாமே முன்வந்து கேளாமல் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் மூலம் உதவி புரிந்துள்ளார் - பொது நிறுவனங்கள் மூலம் உதவி புரிந்துள்ளார் என்றால் அவரின் சேவை மனப்பான் மையை - உதவும் உள்ளத்தை இந்த நூற்றாண்டில் தனிமனிதரில் காண்பது அரிதான ஒன்றாகும். இந்தக் கட்டுரையை வாசிப் போர்களுக்கு கனவா - இல்லை நனவா என்று எண்ணத் தோன் றலாம், ஆம் இதுதான் எமது நிறுவனரின் உயர்வான முத் திரைகள்.

"மனைவி, மக்கள், பொன், பொருள் இவைகளுக்காக மக்கள் குடம் குடமாய்க் கண்ணீர் சிந்துகிறார்கள். ஆனால் ஞானம் வேண்டும், அருள் வேண்டும், உண்மை வேண்டும் என்று அழுப வர்கள் யார் என்று கூறினார்." சுவாமி விவேகானந்தர். சுவா மியின் வேதனைக்கு இங்கே நான் இருக்கின்றேன் என்று கட்டியம் கூறுவதுபோல் - இப்பிறப்பை அறுத்து ஞான வாழ்வில் கலக்க சகல தையும் துறந்து செயல் பெற்று வரும் நிறுவனரின் வாழ்க்கை வரலாறு உழைப்பால் உயரத் துடிக்கும் எதிர்காலச் சந்ததியின ருக்கு படிப்பினையாக அமையுமென்றால் மிகையாகாது.

சித்த மருத்துவ வெளியீடு - 1987

# வாந்தி பேதியும் - தடுப்பு முறைகளும்

எமது நாட்டில் தற்பொழுது பரவி வரும் நோய்களை நோக்குமிடத்துக் கூடுதலாக சுகாதாரப் பற்றாக் குறைவினால் ஏற்படும் தொற்று நோய்களாகவே இருக்கின்றன. இவற்றிற்குக் கூடுதலாகக் குழந்தைகளே ஆளாகின்றார்கள். அவர்களில் நோயெதிர்ப்புத் தன்மை குறைவாகக் காணப் படுவதால் நுண் கிருமிகளின் தாக்கம் வலுவாகக் காணப் படுகின்றது. இருப்பினும் நோய்க் கிருமிகளின் தாக்கம் நோய் எதிர்ப்புத் தன்மையில் மட்டுமல்லாது நோய்க் கிருமிகளின் அளவிலும் தங்கியுள்ளதென்பதைப் பொறுத்து தொற்று நோய்களானது நடுத்தர வயதினரையும், வயோதிபரையும் தாக்கும் எனக் கொள்ளலாம்.

வாந்திபேதியை ஏற்படுத்தும் நோய்க்காரணி

வாந்திபேதியானது ''விப்ரியோ கொலரா'' எனும் நுண் கிருமியால் ஏற்படுத்தப்படுகின்றது. இது பக்ரீரியா வகையைச் சேர்ந்த நுண்ணங்கியாகும். இவ்வங்கிகள் கூடுதலாக ஈரலிப்பான இடத்திலும், காரவூடகத்திலும் வளர்ச்சியடைகின்றன. ஆனால் கூடிய வெப்ப நிலையிலும் (அண்ணளவாக 55 °C) அமில ஊடகத்திலும் அழிந்துவிடும்.

வாந்திபேதி பரவும் சந்தர்ப்பங்கள் :

வாந்திபேதி கூடுதலாகச் சுகாதாரப் பற்றாக்குறை உள்ள இடங்களிலே ஏற்படுகின்றது. அவ்விடயங்களில் சனத்தொகை அதிகமாக இருத்தல், வடிகால்கள் அதிகம் இருத்தல், மலசல கூட வசதிகள் அற்றிருத்தல், பல குடும்பங்களுக்குப் பொதுவான ஒரு கிணறு காணப்படுதல் என்பன நிலைமையை மேலும் மோசமடையச் செய்கின்றன. அத்துடன் வருமானம் குறைந்த, அதிக அங்கத்தவர்களுடைய குடும்பங்களில் வாழ்வோர் தேவையான போஷாக்கின்மையால் இந்நிலைக்கு இலகுவில் ஆளாகுகின்றார்கள்.

வாந்திபேதித் தொற்று ஏற்படும் முறை :

வாந்தி பேதியால் பீடிக்கப்பட்ட ஒரு நோயாளி வீட்டிற்கு அருகிலோ அல்லது மலகூடம் தவிர்ந்த ஏனைய

பொதுவிடங்களிலோ மலம் கழிப்பதனாலேயும் அல்லது எடுப்பதனாலேயும் அவற்றில் காணப்படும் நோய்க்கிருமிகள் நீர் மூலமாகவோ, உணவு மூலமாகவோ மற்றையோருக்கும் தொற்ற ஏதுவாகின்றது. இத் தொற்றில் ஈக்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. சில குடும்பங்களில் வறுமையின் காரணமாக மலசல கூடத்திற்குக் கொண்டு சென்ற வாளியை தண்ணீர் எடுப்பதற்கும் உபயோகிப்பார்கள். இதை பொதுக்கிணறுகளில் நீரை எடுப்பதற்கு உபயோகிப்பார்களேயானால் அந்நீரிலும் நோய்க்கிருமிகள் பரப்பப்படும். மேலும் சிலபேரில் நோய்க்கிருமிகள் தொற்றினாலும் நோயை ஏற்படுத்துவதில்லை. ஆனால் இவர்களில் அக்கிருமியானது அடிக்கடி வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கும். இவர்கள் காவிகள் எனக் குறிப்பிடப்படுகிறார்கள். இவர்கள் மூலம் நோய் பரப்பப்படும்.

**வாந்திபேதி தாக்கத்தின் தன்மை :**

வாய்மூலம் உள்ளெடுக்கப்பட்ட நோய்க்கிருமியானது சிறுகுடலை அடைந்து அதன் மேலணி இழையத்தைப் பற்றி வளர்ச்சியடைந்து நச்சுப் பொருட்களை வெளிவிடுகின்றது. சாதாரணமாக குடல் மேலணி இழையங்கள் எழுபத்தி இரண்டு மணித்தியாலங்களில் அழிக்கப்பட்டு, புதிய மேலணிக் கலங்களை உருவாக்குகின்றன. எனவே இவ் மேலணியைப் பற்றி இருக்கும் கிருமிகளும் அழிக்கப்பட்டு மலத்துடன் வெளியேற்றப்படும்.

**நோயின் குணங்குறிகள் :**

இந் நோயின் நோயரும்பு காலம் சில மணித்தியாலங்களிலிருந்து ஐந்து நாட்கள் வரை காணப்படும். ,இக்கால எல்லையின்பின் நோய்க்கான குணங்குறிகள் ஏற்படத் தொடங்கும். முதலில் முக்கியமான குறியாக வயிற்றுப் போக்கு ஏற்படும். தொடக்கத்தில் மலத்தினளவு கூடுதலாகவும் படிப்படியாக மலத்தினளவு குறைந்து நீர்த்தன்மையான மலமாகவும் கழியும். அரிசி கழுவிய நீரைப்போன்றிருக்கும். அதைத் தொடர்ந்து குமட்டல் இலலாது வாந்தியும் வயிற்று நோவும் காணப்படும். இவற்றிற்கு நாம் சிகிச்சையளிக்காவிட்டால் தொடர்ந்து வயிற்றுப் போக்கும், வாந்தியும் ஏற்பட்டு திரவமும், உப்புக்களும் இழந்த

வண்ணமிருக்கும். இதனால் நீரிழப்பிற்குரிய குணங்குறிகள் தோன்ற ஆரம்பிக்கும்.

வாந்திபேதி தடுப்பு முறைக்கான வழிமுறைகள் வருமாறு:

★ கொதித்தாறிய நீரைப் பாவிக்கவேண்டும்.

★ நீர்நிலைகள் கிணறுகள் போன்றவற்றை இறைத்து விடலாம். அல்லது கிணற்றில் குளோரின் போட்டு சுத்திகரிக்கலாம்.

★ மலசல கூடத்திற்குச் சென்று வந்த பின்பும், உணவு உண்ண முன்பும் கை நன்கு சவர்க்காரம் போட்டுக் கழுவுதல் வேண்டும்.

★ வீட்டுச் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாகப் பேணல் வேண்டும். ஈக்களை அழிக்க வேண்டும் ஈக்களால் உணவு தீண்டப்படுவதைத் தவிர்க்க வேணடும்.

★ குழந்தைகளுக்கு உணவூட்ட உபயோகிக்கும் பொருட்கள், பாற்போச்சி, சூப்பி போன்றவற்றை 20 நிமிடங்கள் வரை கொதிநீரில் அவித்தல்வேண்டும்.

★ பழுதடைந்த உணவுப்பொருட்களை அல்லது சமைக்கப்படாத உணவுப் பொருட்களையோ தவிர்ப்பது நல்லது.

★ சுகாதாரமற்ற இடங்களில் சுகாதாரமற்ற முறையில் சமைக்கப்படும் உணவுப் பொருட்கள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் போன்றவற்றைத் தவிர்க்கவேண்டும்.

★ அவசியம் இல்லாமலும், அனுபவம் இல்லாத அறிவுரை கேட்டு குழந்தைகளுக்கு மருந்துகளைக் கொடுக்கக் கூடாது.

★ நோயாளி வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்று வந்ததன் பின்பும் சில நாட்களுக்கு அவரை தனிமைப்படுத்தி வைத்திருப்பதுடன் அவர் பாவிக்கும் பொருட்களை மற்றையவர்கள் பாவிப்பதைத் தவிர்க்கவேண்டும். மேலும் குழந்தைகளாயின் அவர்களைப் பராமரிப்பவர் துப்பரவாக இருக்க வேண்டும்.

மேற்கூறிய தடுப்பு முறைகளை நாம் கடைப்பிடிப்போமாகில் ''நோய் வருமுன் காப்போம்'' என்பதற்கிணங்க சுகதேகிகளாக வாழலாம்.

ஐ—

# வளர்ப்பு மிருகங்களுக்கு ஏற்படும் நோய்களும் அவற்றுக்குரிய சிகிச்சை முறைகளும்

— க. ஸ்ரீதரன், 3-ம் வருடம் —
சித்த மருத்துவத்துறை,
யாழ்-பல்கலைக்கழகம்.

## மாடுகள் :

**அழல் வெட்கை நோய் :**

மாடு சிவந்த நீர் விடும், உள் அழல் இருக்கும், உடம்பு எல்லாம் நெருப்புச் சுட்டதுபோல் இருக்கும், தீனி தின்னும்.

**மருந்து :**

தென்னம் பாளையும், பச்சை நெல்லிக்காய்யும் இடித்து சாடியில் ( பழச்சாறு ) 2 நாள் ஊறவைத்து மறுநாள் பிழிந்து கொடுத்தல்.

**அடைப்பான் நோய் ;**

இதற்கு வசம்பு, மாவிலங்கம் பட்டை, வெற்றிலை, சுக்கு, சித்தரத்தை, திற்பலி, ஓமம் ஆகிய 7 சரக்கையும் சமனாகச் சேர்த்து அரைத்து உருண்டையாக்கி வெந்நீரில் கொடுத்தால் அடைப்பான் நோய் தீரும். தீனி நெய்க்கஞ்சி.

**நஞ்சுக்கொடி விழுவதற்கு .**

நாகதாளியை பறித்து நல்லெண்ணெயில் கொடுத்தல். அல்லது மூங்கில் இலை, கரும்பு, தருப்பைப்புல் இவற்றைக் கொடுக்க கொடி விழும்.

**இளைத்த மாட்டிற்கு :**

இளைத்து துரும்பாக இருக்கும் மாட்டிற்கு ஒரு வாரத்திற்கு நீராகாரத்துடன் நல்லெண்ணை சமனாய்க் கூட்டி அதில் 4 கிராம் கற்பூர இலைச் சாற்றை கலந்து கொடுக்கவும். தீனையும் சத்துள்ளதாகக் கொடுத்தால் விரைவில் உடல் தேறும்.

**உள் அடைப்பான் :**

வாயால் தண்ணீர் விழும், நாக்குத் தொங்கும், மயிர்சிலித்திருக்கும், தூங்கும்.

**மருந்து ;**

மிளகாய், வெற்றிலை, உரலில் போட்டு துவைத்து உள் ளுக்குக் கொடுக்க நோய் தீரும்.

**எலும்புருக்கி நோய் :**

இளைத்திருக்கும், சதை குறைந்து எலும்புகள் வெளித் தெரியும், சோர்ந்து விழும், சக்தியிராது, சாணத்துடன் இரத்தம் போகும்.

**மருந்து :**

(i) வில்வவேரை அரைத்து வில்வங்காயளவு எடுத்து மோரில் கலந்து கொடுக்கலாம்.

(ii) ஆவரசமிலையை அடுப்பில் வேகவைத்து பிசைந்து மோருடன் கொடுக்கலாம்,

**தளர்ச்சியாய்ச் சாணம் போடுவதற்கு ;**

தருதாளை இலை அல்லது நுணாக் கொழுந்தை ஒரு பிடி அளவு கொடுத்தால் தளர்ச்சியாய்ச் சாணம் போடும்.

**பேதியாகும் மாட்டிற்கு :**

மொந்தன் வாழைப் பொத்தி 3, வசம்பு 4 கிராம், தேன் வேண்டியளவு. பூவின் மேலுள்ள மடல்களை எடுத்துவிட்டு, வசம்பைச் சுட்டு சேர்க்கவும். பின் தேனைவிட்டு பிசைந்து கொடுக்கவும்.

**மலடு நீங்கி சினைப்பட :**

(i) ஆடுதின்னாப் பாலை, கோரைப்புல், அரைத்து உப்பைக் கலந்து கொடுக்கலாம்.

(ii) தென்னம்பாளை 1 பங்கு, சாதிக்காய் 1 பங்கு, சாதிபத்திரி 1 பங்கு, ஏலம் 1/2 பங்கு, கராம்பு 1/2 பங்கு இவைகளை இடித்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

ஆடு, மாடுகள் கன்று ஈன்றதும் முதல் வரும் கடும்புப்பால் பல நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொண்டது. இதனைக் கறந்து வெளியே ஊற்றிவிடாதீர்கள். குட்டி அல்லது கன்றை நன்றாக ஊட்ட விடவும். இதனால் இவை ஆரோக்கியமாகவும் இலகுவில் நோய்வாய்ப்படாமலும் வளர்ந்து வரும். எனவே பழைய மூடக் கொள்கைகளை கைவிட்டு இதன் அவசியத்தை அயலார்க்கும், சமுதாயத்திற்கும் விளக்கிக் கூறவும்.

அ—

# சாள்ஸ்டாவின் (டார்வின்)

சாள்ஸ்டாவின் இங்கிலாந்தில் சுரூஸ்பெரி என்னுமிடத்தில் 1809-ம் ஆண்டு மாசி மாதம் 12-ம் திகதி பிறந்தார். இவரது தகப்பன் டொக்டர் றொபேட் மிகப் பிரபல்யமான வைத்தியராய் இருந்தார். டார்வினின் பாட்டனாரும் பிரபல்யம் வாய்ந்த வைத்தியர்தான். அதுமட்டுமல்லாமல் அவர் தத்துவ ஞானியாகவும், இயற்கையை ரசிப்பவராகவும் இருந்தார். சாள்ஸ்டார்வினும் தகப்பனாரைப் போல வைத்தியத் துறையிலேயே ஈடுபடுவார் என்று அவரது இளமைப் பருவததில் எதிர்பார்க்கப்பெற்றது. டார்வின் ஒன்பதாவது வயதில் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். அவர் திறமையுள்ள மாணவனாய் விளங்கவில்லை. எழுத்துக் கூட்டுவதிலும் பிறமொழியைக் கற்பதிலும் திறமை அற்றவராய்த் திகழ்ந்தார்.

பள்ளிக் கூடத்தில் அவரை எதுவும் கவரவில்லை. அவர் சிறு கற்களையும், கனிப் பொருட்களைச் சேகரிப்பதிலும், பறவைகளை அவதானிப்பதிலும் விருப்பமுடையவராயிருந்தார். பாடங்களில் கவனம் செலுத்த முடியாதிருந்த டார்வினுக்கு சேக்ஷ்பியர் நூல்களை விளையாட்டாய்ப் படிப்பது எளிதாக இருந்தது. உலகின் மிகத் தூரமானதும், மிக அதிசயமானதுமான பகுதிகளைக் கண்டுபிடித்தவர்கள் எழுதிய நூல்களை அவர் விரும்பிப் படித்தார்.

டார்வினுக்கு பதினாறு வயதான போதும் படிப்பில் நாட்டம் ஏற்படவில்லை. தாவரங்கள், பூச்சிகள், பறவைகள் போன்றவற்றைச் சேகரிப்பதிலேயே அவருக்கு ஆர்வம் இருந்தது. டார்வினின் சிறுபிள்ளைத் தனமான ஆசையைக் கண்ட தகப்பனார் டொக்டர் றொபேட் டார்வினுக்கு கோபந்தான் வந்தது.

தகப்பனார் மனம்விட்டுப் பேசி வற்புறுத்தியதின் பயனாக 1825 ஐப்பசி மாதம் டார்வின் எமன்பேக் பல்கலைக் கழகத்திற்குச் சென்றார். படிப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதாக அவர் தகப்பனாருக்கு வாக்குக் கொடுத்தார். ஆனால் டார்வினுக்கு அந்தச் சூழலும், விரிவுரைகளும் பிடிக்கவேயில்லை.

ஒரு வைத்தியராக வரவேண்டும் என்ற ஆசை டார்வினுக்கு இருக்கவில்லை. ஆனால் தகப்பனாரையும் ஏமாற்ற விரும்பவில்லை. ஆனாலும் அவரது ஆர்வங்கள் புவிச் சரிதவியல் பற்றி நிறையக்

கற்பதிலும், தாவரங்களையும் விலங்குகளையும் பாகுபடுத்துவதிலுமே இருந்தன. இரண்டு வருடங்கள் எடின்பேக்கில் இருந்த பின்னர் டார்வின் தனக்கு இந்த வைத்தியப் படிப்பில் ஈடுபாடு இல்லை என்பதைத் தனது சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் சொல்லும் வல்லமை பெற்றார். பின்னர் தகப்பனாரின் வற்புறுத்தலால் 1828-ம் ஆண்டில் கேம்பிறிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து சமய சித்தாந்தம் படிக்கத் தொடங்கினார். அவரது மனம் இதிலும் நாட்டம் கொள்ளவில்லை.

ஜோன் எஸ். ஹென்ஸ்லோ என்ற பேராசிரியரின் தாவர வியல் விரிவுரைகளை டார்வின் கேட்கத் தொடங்கினார். இருவரும் நண்பர்களாயினர். இருவருமாக நீண்ட வெளிக்களச் சுற்றுலாக்கள் சென்று அரிய தாவர வகைகளைச் சேகரித்து வருவார்கள். தனது பீ. ஏ. இறுதித் தேர்வின்போது சித்தியடையாமற் போய்விடுவோமோ என்ற பயம் டார்வினுக்கு ஏற்பட்டது. அப்போதுதான் அவர் படிப்பில் ஈடுபட்டார். தேர்வில் வெற்றியுமடைந்தார்.

இதன் பின்னர் டார்வின் விஞ்ஞான நூல்களைக் கற்கத் தொடங்கினார். செட்விக் பேராசிரியரிடம் டார்வின் புவிச்சரிதவியல் பற்றி விரிவாகக் கற்றார். 1831-ம் ஆண்டு டார்வின் எல்லாவற்றையும் விட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பி வந்தார். அப்போதுதான் அவருக்காகக் காத்திருந்த ஒரு கடிதத்தைக் கண்டார்.

அது பேராசிரியர் ஹென்ஸ்லோவிடமிருந்து வந்திருந்தது. றோயல் நேவி எச். எம். எஸ். பீகிள் என்ற கப்பலை ஐந்து வருடம் விஞ்ஞான ஆராய்ச்சிக்காக உலகைச் சுற்றி அனுப்பப் போகிறதென்றும் அதில் ஆராய்ச்சியாளராகச் செல்வதற்கு டார்வின் பெயரைத் தாம் கொடுத்திருப்பதாகவும் ஹென்ஸ்லோ எழுதியிருந்தார்.

டார்வினுக்கு இந்தச் செய்தி மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஐந்து வருடம் வீணாகிவிடும் என்றே தகப்பனார் கருதினார். தகப்பனாரைச் சமாளித்த டார்வின் பிளைமவுத் என்னுமிடத்தில் இருந்து 1831-ம் ஆண்டு மார்கழி 27-ம் திகதி பீகிள் தனது பிரயாணத்தைத் தொடங்கியது. கப்பலில் டார்வின் நோய்வாய்ப்பட நேர்ந்தது. அப்போதும் அவர் தனது ஆர்வத்தை விடவில்லை. அரிய பொருட்கள் பலவற்றை சேகரித்து அவற்றுக்குப் பெயரிட்டு, அவற்றில் சிலவற்றை இங்கிலாந்திலிருந்த விஞ்ஞானக் கழகங்களுக்கு அவர் அனுப்பினார்.

டார்வின் மிகுந்த ஞாபக சக்தி உள்ளவராகவும் அவதானிப் புத்திறன் உள்ளவராகவும் இருந்தார். இயற்கையின் விந்தைகளை அவர் இயல்பாகவும், திறந்த மனத்தோடும் கற்றார். இந்தக் கடற் பிரயாணம் பல தீவுகளுக்குச் செல்லும் சந்தர்ப்பத்தையும் அளித்தது. தென் அமெரிக்காவுக்கு மேற்கே பல மைல் தொலைவில் கலபகோஸ் தீவுகள் இருக்கின்றன. அங்கே அதிசயமான தாவரங்களையும் விலங்குகளையும் டார்வின் கண்டார். ஒரு தீவில் 3 அடி நீளமான பெரிய பல்லிகள் போன்ற விலங்குகளைக் கண்டார். இராட்சத ஆமைகளையும் கண்டார். டார்வினுக்குப் பரிணாமம் பற்றிய கருத்துக்கள் தோன்றியிருக்கக் கூடும்.

ஒரே இனப் பறவைகள் வெவ்வேறு இயல்புகளையுடையனவாக இருப்பதை அவர் கண்டார். சிலவற்றின் சொண்டுகள் வளைந்திருந்தன, வேறு சிலவற்றின் சொண்டுகள் நேராக இருந்தன. இவை வெவ்வேறு வகையான உணவுகளை உண்கின்றன என்ற காரணத்தினாலா? பசுபிக் தீவுகளில் மக்களுக்கிடையே காணப்பட்ட வேறுபாடுகள் சுற்றாடலுக்கேற்ற இசைவாக்கங்களின் விளைவுகளா? இந்தக் கேள்விகள் டார்வின் மனதில் எழுந்து சிந்தனையைத் தூண்டின.

*1935*-ம் ஆண்டு ஐப்பசி பீகிள் இங்கிலாந்துக்குத் திரும்பியது கப்பலில் இருந்தபடியே தான் சேகரித்தனுப்பிய பொருட்கள்பற்றி நல்ல விளம்பரம் ஏற்பட்டிருப்பதையும் அப்பொருட்கள் தாவர விலங்கியல் அறிஞர்களிடையேயும், புவிச்சரிதவியல் ஆராய்ச்சியாளரிடையேயும் ஆச்சரியத்தை உண்டாக்கியிருக்கின்றன என்பதையும் அவர் அறிந்தார்,

*1836*-ல் டார்வின் பிரயாணம் பற்றி ஒரு நூலை எழுதி வெளியிட்டார். இந்நூல் நன்றாக விற்பனையாகியதோடு அவருக்குப் பெரும் புகழையும் ஈட்டிக் கொடுத்தது. *1838*-ல் டார்வின் புவிச் சரித கழகத்தின் செயலாளராகத் தெரிவு செய்யப் பெற்றார். *1839*-ல் எம்மா என்ற தனது உறவுப் பெண்ணை மணந்து கொண்டார். எம்மா டார்வின் ஆராய்ச்சிக்கு உதவியாக இருந்தார்.

*1859*-ம் ஆண்டு கார்த்திகை *24*-ம் திகதி டார்வின் தனது *"ORIGIN OF SPECIES"* என்ற பரிணாம நூலை வெளியிட்டார். இது விஞ்ஞானிகளிடையேயும், சமயவாதிகளிடையேயும். பெருத்த வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியது. பன்னிரண்டு வருடங்களின் பின்னர் *1871*-ம் ஆண்டு *"THE DESCENT OF MAN"* என்ற நூலையும் வெளியிட்டார். இதில் அவர் மனிதனின் பரிணாமத்தை நன்கு விளக்கியிருந்தார், குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற தத்துவத்தை உலகிற்கு முதன்முதலில் எடுத்துக் காட்டியவர் டார்வினே.

*1882*-ம் ஆண்டு சித்திரை *19*-ல் டார்வின் காலமானார்.

உ

# ( நிறுவனரின் வாழ்க்கை வரலாறு )

## அங்கம் - 4

ஆடி மாத இதழில் எமது 50 வயது காலவரையான வாழ்க்கைக் குறிப்பை குறிப்பிட்டிருந்ததோடு பருத்தித்துறை ஆலையில் இருந்து வெளியேறியது பற்றியும் குறிப்பிட்டிருந்தோம். இதனைத் தொடர்ந்து எமக்கு பரிச்சயமான ஆலைத் தொழிலை ஆரம்பிக்க எண்ணி 1 1/4 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட காணியில் 70 X 60 சதுர கட்டிடப் பரப்பளவையும் கொண்ட அரிசி ஆலை ஒன்றினை ஓமந்தையில் கண்டி வீதிக்கு அருகே ரூபா 88,000/- ற்கு வாங்கி தொழிலகத்தை ஆரம்பித்தோம். நாம் இத் தொழிலகத்தை வாங்கி தொழிலை ஆரம்பித்தபோது அரசாங்கத்திடமிருந்து குற்றுவதற்கு நெல் வராமையினால் ஆலையிலுள்ள திருத்த வேலையைச் செய்த தோடு ஆலைக் காணியில் ஒரு கிணற்றையும் வெட்டிப் பூர்த்தி செய்தோம். இதன் பயனாக எமது ஆலையில் வேலைக்கென்றிருந்த தொழிலாளர்கள் வேலை இழப்பீடு இன்றி ஆலை அமைந்துள்ள காணியில் வாழை, உழுந்து, சோளம், கச்சான், கத்தரி, மிளகாய் போன்ற பயிர்களையும் செய்கை பண்ண முடிந்தது. செய்கை பண்ணிய விளை பொருட்களை யாழ்ப்பாணப் பகுதிக்கு கொண்டுவந்து விற்பனையும் செய்துள்ளோம்.

1974-ம் ஆண்டு நான்கு மாதமளவில் 1975-ம் ஆண்டு 3 மாதம் அளவிலும் மட்டுமே எமக்கு அரசாங்கத்திடமிருந்து குற்றுவதற்கு நெல் கிடைத்தது. மேலும் ஓமந்தைப் பகுதி குடிசனம் குறைவாய் உள்ள பகுதி என்பதாலும் அங்குள்ளவர்களில் அனேகர் நெற் செய்கை மேற்கொள்பவர்கள் என்பதாலும் எமது பகுதிகளைப் போன்று நெல்லைக் குற்றி அரிசி விற்பனை செய்வதிலும் அவ்வளவாக வாய்ப்புக்கள் இருக்கவில்லை என்பதோடு அவ்விட சுவாத்திய சூழ்நிலையும் எமக்குச் சரியான முறையில் அமையவில்லை. எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு இவ்வாலையை விற்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு 1976-ம் ஆண்டளவில் துன்னாலையில் இயங்காமல் இருந்த அரிசி ஆலையைக் குத்தகைக்கு

எடுத்து அரிசி உற்பத்தி செய்யும் வேலையை ஆரம்பித்தோம். 1977-ம் ஆண்டளவில் ஓமந்தையில் உள்ள ஆலையை 90 ஆயிரம் ரூபாய்க்கு விற்றுவிட்டோம். அம்முதலுடன் துன்னாலை அரிசி ஆலையை நடாத்தி வந்தோம் - நிற்க.

இவ்விடத்தில் எமது வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தைப்பற்றியும் கூறவிரும்புகின்றோம். நாம் மேலே சொல்லியவாறு ஓமந்தையில் தொழிலை ஆரம்பிக்க செல்வதற்கு மூன்று வருடங்ளுக்கு முன்னர் அதாவது 1970-ம் ஆண்டளவில் எமது அயலிலுள்ள கந்தசாமி கைம்பெண் சிவபாக்கியம் என்பவர் தனக்குச் சொந்தமான மூன்று பரப்புக் காணியை ரூபா 15 ஆயிரத்துக்கு எமக்கு அறுதியாக விற்றிருந்தார். ஒரு நாள் ஓமந்தையில் இருந்து நாம் எமது வீட்டுக்கு வந்திருந்தபோது காணியை அறுதி விற்ற கந்தசாமி சிவபாக்கியம் எம்மிடம் வந்து இக்காணியை வேறு யாரோ விலைகூடக் கேட்பதாகவும் ஆகவே கூடிய பணத்தைத் தருமாறும் கேட்டார்கள். அக் காணியை எமது சகோதர முறையான ஒருவரே தனக்குத் தரும்படி கேட்டுள்ளாரென அறிந்தோம். நாம் உடனே காணியை விற்ற சிவபாக்கியம் அவர்களிடம் நாமே சென்று அக்காணியை விலைகூடக் கேட்டவர்களிடம் சென்று கதைத்து காணியை எழுதிக்கொடுத்து மேலதிக பணத்தை வாங்கித் தருவதாகக் கூறினோம். அதன்படி வாங்க விரும்பியவரிடம் சென்று அக்காணியை எழுதித் தருவதாக ஒப்புக்கொண்டு எழுதும் தினத்தையும் ஒழுங்கு செய்து அந்தத் தினத்தில் ஓமந்தையில் இருந்து வந்து உறுதி முடித்துக் கொடுத்து மிகுதிப்பணம் முழுவதையும் சிவபாக்கியம் அவர்களிடம் கொடுத்து ஓமந்தைக்கு சென்றுவிட்டோம்.

இக் காணியைத் திருப்பி எழுதிக் கொடுத்தமையினால் எமது 2-ம் மகளுக்கும் எமக்கும் சிறு கருத்து வேற்றுமை ஏற்பட்டது. இவற்றை நாம் எமது சிந்தனையில் எடுத்துக் கொள்ளவில்லை. ஒருவரின் சொத்தை அவர் மனம் நோக எடுப்பது முறையல்ல என்பதே எமது நிலைப்பாடு. மற்றவர்களாயிருந்தால் 3 வருடங்கள் சென்ற பின்னர் இதைத் திருப்பிக் கொடுத்திருக்க மாட்டார்கள்.

1972-ம் ஆண்டளவில் எமது மகன் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் படிப்பதற்காக ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுத்திருந்தோம். ஆனால் அவரால் படிப்பை பூர்த்தி

செய்ய முடியவில்லை. அவருக்கு அரச நிறுவனங்களில் தொழில் தேடியும் கைகூடவில்லை. இடை இடையே ஓமந்தை அரிசி ஆலைக்கு வந்து போவது வழக்கம். பீனிச நோய்க் குறைபாடு காரணமாக அவருக்கு ஆலைச் சூழ்நிலை அறவே ஓ த் து க் கொ ள் ள வி ல் லை. 08-01-1974 இல் ஸ்கூட்டரில் யாழ் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்குப் போகும்போது மந்திகைச் சந்தியில் லொறியுடன் மோதி மண்டை வெடிப்பு ஏற்பட்டிருந்தது. இச்செய்தி அறிந்து ஓமந்தையில் இருந்து வந்தோம். மகனின் காயத்தை மாற்றுவதற்கு மந்திகை – மானிப் பாய் – யாழ்ப்பாணம் போன்ற வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக் காக கொண்டு சென்று சுகப்படுத்தி உள்ளோம். மோட்டார் சைக் கிளுடன் மோதிய லொறிக்காரனிடம் இருந்து நட்டஈடு பெறுமாறு எம்மைப் பலர் வற்புறுத்தினார்கள். எமது வினைப்பயனாய் வந்த செயலுக்கு நட்டஈடு கோருவதை எவ்விதத்திலும் விரும்பவில்லை.

1977-ம் ஆண்டளவில் மூத்த மகளுக்கு கல்யாணப் பேச்சு ஆரம்பமானது. விவாகப் பேச்சின்போது 16 பவுண் வரையான நகைகளும் 25 பவுண் பெறுமதியான 10 ஆயிரம் ரொக்கமும், 2 பரப்பு விஸ்தீரணம் கொண்ட வீடு வாசலும், 1 1/4 பரப்பு காணி யும் தரலாம் எனக் கூறியிருந்தோம். விவாகம் பேச வந்தவர்கள் காணி கொடுக்கத் தேவையில்லை ரொக்கம் 15 ஆயிரம் தரவேணும் என்றும், இல்லாவிட்டால் கலியாணம் செய்ய முடியாது எனவும் கூறினார்கள். எமது குடும்பத்தினர் இதை எவ்விதமும் செய்தே ஆகவேண்டுமென என்னை வற்புறுத்தினார்கள். எ ன வே அப் பணத்தைத் தருவதாக ஒப்புக்கொண்டு சொன்ன பேச்சுக்குரிய காணி யையும் எழுதிக் கொடுத்து அவ்விவாகத்தை முடித்திருந்தோம். சிறிது காலத்தில் மூத்த மருமகன் எமது மகளைக் கூட்டிக்கொண்டு தொழில் நிமித்தம் மூதூர் சென்றுவிட்டார்,

எமது இரண்டாவது மகள் இதே காலப் பகுதியில் மேற் படிப்பிற்காக பேராதனைப் பல்கலைக்கழகம் செல்லும் நிலை ஏற் பட்டது. அதற்குரிய ஒழுங்கை மேற்கொண்டு படிக்க விட்டிருந் தோம். எமது இளைய மகளும் வடஇந்து கல்லூரியில் படித்து வந்தா. அவவால் கல்வியைக் கற்று முன்னேற முடியவில்லை. இவர் கள் எல்லோருக்கும் 1 மைல் தொலைவிலுள்ள வடஇந்து மகளிர் கல்லூரிக்கு சென்று கல்வி கற்பதற்கு முழுக்காலமும் எமது கிரா மத்திலுள்ள மாட்டு வண்டியை ஒழுங்கு செய்து இருந்தோம்.

1980-ம் ஆண்டு வரையும் துன்னாலையில் உள்ள எமது அரிசி ஆலையை நடாத்தி தொழில் செய்து வந்தோம். ஆரம்பத்தில் 300 ரூபாய் பேசி குத்தகைக்கு எடுத்த அரிசி ஆலை 1980-ம் ஆண்டு காலப்பகுதியில் மாதம் 1500 ரூபாய் அளவில் கொடுத்துள்ளோம். இக் காலப் பகுதியில் துன்னாலை மில்லைவிட்டு சொந்த ஊரில் ஒரு ஆலையை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் உருவாகலாயிற்று. அதற்காக எமது கிராமத்திலுள்ள மயானத்துக்கு அணித்தாய் உள்ள 10 பரப்பு நிலத்தை தெரிவு செய்தோம். வேறு எங்கும் இவ்வகையான இடவசதி கொண்ட நில அமைப்பு இருக்கவில்லை. நாம் அமைக்க எண்ணிய ஆலைக்கும் சுடுகாட்டிற்கும் 200 மீற்றரே இடைவெளியாய் அமைந்திருந்தது. பழமையில் மூழ்கிய எமது மக்கள் பேய், பிசாசு என்று காரணம் கூறி எம்மைத் தடுக்க எண்ணினர். இவர்கள் கூறிய காரணங்களை என்மனம் ஏற்க மறுத்தது. கூடிய கெதியில் நாம் நினைத்த சொந்த ஆலை அமைக்கும் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கோடு எமது மகனின் பெயரில் மேற்படி காணியைக் கொள்வனவு செய்தோம். கொள்வனவு செய்த கையோடு 75 X 37 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட கட்டிடத்திற்கு 1980-ம் ஆண்டு ஆவணியில் அத்திவாரம் இட்டோம்.

நாம் நிர்மானிக்க எண்ணிய அரிசி ஆலையின் செயற்பாடுகளை முழுமையாக கவனிக்க எண்ணிய காரணத்தினால் எமது துன்னாலை அரிசி ஆலையை 1980 கார்த்திகையில் குறித்த திகதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே உற்பத்தி வேலையை நிறுத்தினோம். முழுநேரமும் - முழுக் கவனமும் இத் தொழில் நிர்மானிப்பிலே செலவழிந்தது. நாம் எண்ணிய எண்ணம் நிறைவேறி 1981-ம் ஆண்டு தையில் இவ்வாலையின் உற்பத்தியை ஆரம்பித்துவிட்டோம்.

நாம் ஊரில் நடைபெறும் நன்மை, தீமைக் காரியங்களுக்கு செல்வது வெகு வெகு குறைவு - இல்லை என்றே சொல்லலாம். எமது முழுக் கவனமும் கடமையிலே மூழ்கியிருப்பதால் இவ்வகை வைபவங்கள் - சடங்குகள் எமக்கு பெரிதாகத் தெரிவதில்லை.

— தொடரும் —

உ

# உண்மையே கடவுள்

## பிரபஞ்ச தத்துவம் பற்றிய ஆய்வு

## தொடர் - 3

**மா**ரிகாலம் ஆரம்பமானதும் இவ்வகையாக வாழும் ஊர்வன வான கறையான், எறும்புகள் புற்றுக்களில் இருந்து இறக்கை முளைத் துப் பறப்பதை மிகுதியாகக் காணுகின்றோம். இவை மூலம் ஊர்வன வில் இருந்து பறவை இனம் உருவான தத்துவத்தை அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறு சிறுசிறு ஊர்வனவுகள் எல்லாம் ஐந்துபூத அணுச்செறிவு வித்தியாசம் அடைந்ததும் பல்லி, ஓணான், தேள், சிலந்தி, பாம்பு, உடும்பு, கீரி, முதலை இவ்வாறாக இவை களில் அணுச்சேர்க்கை இலட்சக்கணக்காய் மாறியதைக் காணமுடி கின்றது.

இவற்றின் ஐந்துபூத அணுக்கூறுகள் 1000, 10000, 100000 கணக்கில் கூடியதும் பெரும் பெரும் பிராணிகளாய் மாறியதைக் காணமுடிகின்றது. இவ் ஊர்வனவெல்லாம் ஒளியும் நல்ல காற்றும் படாத இடங்களை இருப்பிடங்களாக அமைத்துக் கொள்கின்றன. ஏரி – நீர்க்கரைகளிலும், ஈரம் செறிந்துள்ள புதர்ப்பாங்கான இடங் களிலும் தமது இருப்பிடங்களை அமைத்துக் கொள்வதைக் காண முடிகின்றது. நீரில் வாழும் பிராணிகள் நீரில் உள்ள காற்றையே சுவாசித்து வாழ்ந்து வருகின்றன. மீனினங்களில் சில முட்டை இடு வனவாகவும் சில பெரும் மீனினங்கள் குட்டிபோடும் மீனினமாக வும் வளர்ந்துள்ளதைக் காணமுடிகின்றது. இதேபோல சிறு ஊர் வன முட்டை இடும் இனமாகவும் பெரும் ஊர்வன குட்டிபோடும் இனமாகவும் அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது. ஐந்துபூத அணு 10000 க்கு மேல் அமைந்துள்ள இனங்கள் குட்டிபோடும் இனமாக அமைந்துள்ளதைக் காணுகிறோம். ஊர்வனவுகளில் அனேகமானவை விசத்தன்மையுள்ளதாய் அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது. இவை சுத்தமான காற்றும் ஒளியும் செறிந்துள்ள இடங்களில் வாழ முடிவ தில்லை. இவை சில நேரங்களில் உணவுக்காக சிறு பிராணிகளை கலைத்து ஒளி உள்ள இடத்திற்கு வந்தாலும் திடீரென ஒளிபடாத

வசிப்பிடத்திற்கு திரும்பு

கின்றன. ஆகவே இந்த ஊர்வனவுகள் எல்லாம் நல்ல காற்றை யும் ஒளியையும் பெறாமலே தங்கள் சீவிய காலத்தை கழித்துக் கொள்கின்றன. நல்ல காற்றும் ஒளியும் பெற்று வாழாத உயிரி னங்கள் எல்லாம் விச சந்துக்களாய் இருப்பதைக் காண முடிகின் றது. இவற்றில் சில விச சந்துக்கள் இருளில் வாழ்ந்து சிறிது நேரங் களுக்கு வெளியே வந்து நல்ல காற்றையும் ஒளியையும் பெற்றுச் செல்லும் வேளையில் விசத்தன்மை மிகக் குறைவாக இருப்பதைக் காணமுடிகின்றது. இதில் இருந்து நாம் ஒன்றைத் தெரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. மனிதராய் இருந்தாலும் சுத்தமான காற்றும் ஒளியும் இல்லாது வசிப்பவர்கள் பிரச்சினை உள்ளவராய், சண்டை சச்சரவு உள்ளவராய் நியாயத்திற்கு கட்டுப்படாதவராய் நடந்து கொள்வார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

சிறு ஊர்வனவில் சிலவற்றில் சிறகுகள் முளைத்த வண்டு - வெட்டுக்கிளி போன்ற உயிரினங்களாய் மாறியுள்ளதைக் காணமுடி கின்றது. இவற்றின் அணுச்சேர்க்கை 1000க்கு உட்பட்டதாகவே இருக்கும். 1000 அணுக்களுக்கு மேற்பட்டதும் இரு காலும், சிறகுக ளும் கொண்ட சிறு பறவை இனமாக மாறி காலம் செல்லச்செல்ல அணுச் சேர்க்கைகளும் கூடக்கூட கிளி - புறா - மயில் - பருந்து - கெருடன் - இராஜதாளி போன்ற பறவையினங்களாக மாறியுள்ள தைக் காணமுடிகின்றது. பறக்கும் இப்பறவை இனங்களெல்லாம் முட்டையில் இருந்தே தனது இனத்தை விருத்தி செய்கின்றன. இவை குட்டிபோட்டு பால் ஊட்டுவன அல்ல வெளவால் மிருக இனத்தைச் சேர்ந்த பறவை இனமாக உள்ளதால் குட்டிபோட்டு பால் ஊட்டுவனவாய் அமைந்துள்ளன.

ஊர்வனவற்றில் ஒரு பகுதி பறவை இனமாக மாறும்போது மறுபகுதியில் அணில், மர அணில் போன்ற ஊர்வன இனங்கள் மரநாய் போன்ற மிருக இனமாக மாறலாயின, 10000 க்கு உட்பட்ட அணுக்கூறுகள் கொண்டவையாயும் 5, 6 வரு டங்கள் ஆயுள் உள்ளவையாயும் இவற்றைக் காணுகிறோம். இம் மிருக இனங்கள் பல்லாயிரம் வருடங்கள் செல்லச்செல்ல அவற்றின் கடமை உணர்வு காரணமாக ஐந்துபூத அணுச்சேர்க்கை சிறுகச் சிறுகக் கூடி 1000க் கணக்கில் கூடியதும் வேறு இனமாக மாறலா யின. உதாரணமாக நாய், நரி, ஓநாய் போன்றவை காலம் செல்லச் செல்ல அணுச்சேர்க்கை 1000 கணக்கில் கூடிய பன்றி - மான் - மரை - ஆடு போன்ற மிருக இனமாக மாறியதைக்

காணமுடிகின்றது, இவற்றின் ஆயுட்காலமும் 20, 30 வருடங்களாகவும் மாறலாயின. இவைகளும் அணுச் சேர்க்கை 10000 — 100000 (இலட்சக்)கணக்கில் கூடியதும் இவை பிறவி மாறி சிங்கம், கரடி, யானை போன்ற இனமாக மாறுவதோடு ஆயுட்காலமும் 40, 50 வருடங்களாக அதிகரிக்கலாயின. இவ்வகையான மிருகங்களின் கரு வளரும் காலமும் கூடிக் குறைந்து உள்ளதையும் காண முடிகின்றது.

தேவாங்கு முதலிய மிருக வர்க்கங்களிலிருந்து படிப்படியாக வளர்ந்து குரங்கினம் தோன்றலாயின. 10000 அணுக் கூறுகள் கொண்ட தேவாங்கு இனங்களில் இலட்சம் அணுக் கொண்டதாக மாறியதும் குரங்கினங்களாக மாறியதைக் காண முடிகின்றது. இவற்றின் ஆயுட்காலமும் 20 — 25 வருடங்களாய் இருப்பதையும் உணர்ந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. மரநாய், மர அணில் போன்றவற்றில் இருந்து சிறு குரங்கினங்கள் தோன்றலாயின. இக் குரங்கினங்கள் நிலத்தில் வாழும் நிலையைவிட்டு மரத்தின் கொப்புகளிலும் கொடிகளிலும் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டதைக் காணுகின்றோம், இரை தேடுவதற்காய் மட்டும் பகலில் தரையிறங்கி பழவர்க்கத்தையும், காய் வர்க்கத்தையும் இளநீர் போன்றவற்றையும் உணவாக உட்கொள்கின்றன. மிருகங்களில் சில தாவர பட்சணியாகவும் சில மாமிச பட்சணியாகவும் வாழ்கின்றன. மாமிச பட்சணிகள் கொடூரத் தன்மையைக் கொண்டுள்ளதையும் காணமுடிகின்றது.

இக் குரங்கினங்கள் தங்கள் சந்ததியினரை போகும் இடங்களுக்கெல்லாம் தமது அடிவயிற்றின் கீழ் காவிச் செல்வதைக் காண முடிகின்றது. இவை தங்கள் வாழ்க்கையின் பெரும்பகுதியை மரத்தின்மேல் கழிக்கின்றன.

இரவில் மரத்தின் கீழும் நிலத்தின் மேற்பரப்புக்களிலும் அழுக்கான காற்று உலாவுவதை உணர்ந்து கொள்ளலாம். இரவில் சூரிய வெப்பம் இல்லாமையினால் காற்று சுத்தமடைவதில்லை. இந்நேரம் மரங்களிலிருந்து கரியமிலவாயு வெளியேறுவதாலும் காற்று மாசு அடைவதை உணர்ந்து கொள்ளலாம்.

இக் குரங்கினங்கள் மரங்களின்மேல் வாழ்ந்து சுத்தமான காற்றை சுவாசிக்கின்ற காரணத்தினாலும் பகலில் இரை தேடுவதற்காய் வயல் வெளிகளில் அலைவதாலும் நல்ல சுவாசத்தைப் பெற்று வாழ்கின்றன. இவைகளின் இருதயம் நல்ல காற்றினால் இயங்கப்பெறுவதை காணுகின்றோம். நல்ல காற்றை சுவாசித்தலை

யினால் இவைகளது சிந்தனையிலும் பகுத்தறிவுள்ள உயர்வான எண்ணங்கள் பரிணமித்து குரங்கினம் மனித இனமாக மாறியது என்ற டார்வினின் கூற்று முழுக்க முழுக்க உண்மையான ஒன்றாகும். இந்த மனித இனம் ஆரம்பித்த வரலாறும் அவர்களுக்கு ஞானம் பிறந்த வரலாறும் சமயம் தோன்றிய வரலாறுகளும் பிரபஞ்ச தத்துவம் பற்றி ஆராயும் நூலில் வெளிவர உள்ளன. இவைகள் முற்று முழுக்க உண்மையையே அடிப்படையாகக் கொண்டவை.

உண்மையை உள்ளபடி கண்டறிவதும் அந்தத் தத்துவத்தை வைத்துக்கொண்டு உருவாக்கக்கூடிய நல்லவை எவை என அடையாளம் காண்பதும், அவைகளை உண்மைப் பொருள் என்ற முறையில் கண்டறிவதுமே எமது குறிக்கோளாகும். இயற்கையைப் பற்றியும், இயற்கையின் நியதியைப் பற்றியும் அந்நியதியில் உருவான உயிரினங்களைப் பற்றியும் உண்மையைக் கண்டறிவதே எமது சிந்தனையாகும். இவ்வாறு கண்டறியப்பெறும் உண்மை நிலையில் மக்களின் நன்மைக்காக எவ்வளவு தூரம் பயன்படுத்தலாம் என்பதை அறிவதுமே எமது சிந்தனையின் நோக்கமாகும்.

## ஆக்க முரண்பாடுகள்

எமது 13, 14, 15-ம் இலவச வெளியீடுகளான திருக்குறள், உலகநீதி, நன்னெறி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல்வழி, வெற்றி வேற்கை, விவேக சிந்தாமணி போன்ற வாழ்க்கையின் வழிச் செய்யுள்களை, அறநெறி மணிகளாக தொகுத்து வெளியிட்டோம். இவற்றில் சிலர் சில குறைகளை சுட்டிக்காட்டியுள்ளார்கள். உதாரணமாக நன்னெறிச் செய்யுள்கள் சுவாமி ஞானப்பிரகாசரால் அருளிச் செய்யப்பெற்றது அல்ல, வேறு யாரோ ஒருவரால் எனக் கூறுகின்றார்கள். எம்மைப் பொறுத்தவரை இச் செய்யுள்களை எழுதியவரைப் பற்றிய வாதப் பிரதிவாதங்களை விட அவற்றில் உள்ள கருத்துக்கள் இளம் பரம்பரையினரின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைகின்றது என்பதிலேயே அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டு செயல் பெறுகின்றோம் என்பதனை அன்போடும், பண்போடும் தெளிவுபடுத்துகின்றோம். நன்றி.

உ —

# மகாகவி பாரதியாரின் 71-வது நினைவுத் துளிகள்

— சுப்பிரமணியன் ஸ்ரீகுமரன் —



பேன்காற்றாய், தென்றலாய், சண்டமாருதப் புயலாயெல்லாம் சுழன்றாடி மன்றமமைத்த எட்டயபுரச் சிற்றூர் அரங்கினிலே கவி வடித்த பாரதியார் எங்களுக்குத் தந்து சென்றவை ஏராளம்.

பன்மொழிப்புலமை பெற்றிருந்த பாவலன் அவன். அம்மொழிகளிலெல்லாம் உயர்ந்தது; இனியது தமிழ் என்று கூறி வைத்தான். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது ஒன்றில்லை" என்று கூறிய அவன், சொல்லியது போலவே 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவ வகை' செய்தான்.

1882 சித்திர பாணு வருடம் கார்த்திகை மாதம் 27-ந் திகதி சின்னச்சாமி ஐயருக்கும் - லட்சுமி அம்பாளுக்கும் பிறந்த சுப்பையா என்ற சுப்பிரமணியன்தான் எட்டயபுரம் சமஸ்தானத்தால் "பாரதி" என்ற பட்டத்தை தனது 11-வது வயதில் பெற்றுப் பெருங்கவியாய்த் திகழ்ந்தார்.

பலவகைப்பட்ட பாடல்களைச் சுவைசொட்ட வழங்கிய பாரதியாரின் கருத்துக்களே இன்றுள்ள கவிஞர்களையும், கலைஞர்களையும் வழிப்படுத்துவதாகவும், மேற்கோளிடுவனவாகவும் விளங்குகின்றன.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது" என்ற அவரது பாடல் அன்று பரிசு பெறத் தவறியது. இன்றோ அப்பாடலின் உயர்வுத் தன்மையை அனைவரும் போற்றுகின்றனர்.

கடவுளைப் பாடினார்; இயற்கையைப் பாடினார், பெண்ணடிமை, சாதிப்பிரச்சனை, விடுதலைப் போராட்டம் என்றெல்லாம் அவர் பல பாடல்களை எழுதியுள்ளார்.

"மாதர்க்குண்டு சுதந்திரம்" என்றும், "மாதர் தம்மை அடிமை செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்றும் "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையகம் தழைக்குமாம்" என்றும் பெண்ணடிமைக்கு எதிராகக் குரல் கொடுத்து, ஆண் பெண் சமத்துவத்தை வேண்டிநின்ற கவிஞன் அவன் !

தீர்க்க தரிசனம் மிக்கவராக, வெள்ளிப்பனி மலையின்மீது உலவவும், சந்திரமண்டலத்தியல் கண்டு தெளியவும், ஈழத்துக்குப் பாலமமைக்கவும் அவர் கண்ட கனவுகள் இன்று நிதர்சனமாகியுள்ளன.

பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, கண்ணம்மா பாடல்கள் எனப் பெரும் பாடல்கள் பலவற்றையும், சுயசரிதத்தையும் கூட அவர் எழுதி உள்ளார். அக்கால வழக்கப்படி தனது 14-வது வயதில் 7 வயதான செல்லம்மாவை மணம் முடித்த அவர், 1921-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 12-ந் திகதி யானையால் தாக்குண்டு நோய்வாய்ப்பட்டிருந்து, பட்டினி நிலைமையில் மறைந்து போகிறார். இன்று மட்டுமல்ல, இந்த உலகமுள்ள வரையில் – அவரது உயிர்த்துடிப்பான வாசகங்கள் நிலைத்து இருக்கும் வரை தமிழர் நெஞ்சங்களில் பாரதியார் நிறைந்தே நிற்பார். அத்தகைய மகாகவியின் மனவிருப்பை நாம் நிறைவு செய்திடுவோம்.

கிருஷ்ணவதாரத்தில் இறைவன் பாலைக் குடிக்கிறான்; தயிரைச் சாப்பிடுகிறான்; வெண்ணெயைத் தின்கிறான்; அவற்றை எல்லோருக்கும் கொடுத்து மகிழ்கிறான். இதன் பொருள் என்ன? உங்கள் மனம் பாலைப்போல தூய்மையாக இருக்க வேண்டும். உங்கள் சிந்தனை தயிரைப் போலக் குளிர்ச்சியானதாக இருக்க வேண்டும். உங்கள் தயாள சுபாவம் வெண்ணையைப் போலப் பிறருக்காக உருக வேண்டும். அப்போது இறைவன் தனது அருளை உங்கள் எல்லாருக்கும் கொடுத்து மகிழ்வான்.

# விநாயகர் தரும நிதியம் 18 - 07 - 92-ல் நடாத்திய அறநெறித் தேர்வில் பரிசில் அவை பெறும்

| | பாடசாலையின் பெயர் | விலாசம் | விண்ணப்பித்த மாணவர் தொகை | தேர்வெழுதிய மாணவர் தொகை |
|---|---|---|---|---|
| 1. | திக்கம் சித்திவிநாயகர் வித்தி. | அல்வாய் | 14 | 14 |
| 2. | ஏழாலை சை. சன். மார். வித். | ஏழாலை | 115 | 59 |
| 3. | மெதடிஸ் பெண் உயர் கல்லூரி | பருத்தித்துறை | 250 | 95 |
| 4. | மே. பு. சை. பி. வித்தியாசாலை | புலோலிமேற்கு | 45 | 25 |
| 5. | சரஸ்வதி வித்தியாசாலை | அச்சுவேலி | 114 | 64 |
| 6. | புலோலி கி. அ. த. பாடசா. | புலோலி | 15 | 15 |
| 7. | திருஞானசம்பந்த வித்தியா. | சுன்னாகம் | 10 | 9 |
| 8. | சை. பி. கா. வித்தியாசாலை | சங்காணை | 9 | 6 |
| 9. | மெ. மி. த. க. பாடசாலை | தட்டாதெரு பரு. துறை | 12 | 10 |
| 10. | அம்பாள் வித்தியாலயம் | அல்வாய் | 54 | 36 |
| 11. | குடத்தனை அ. மி. த. க. பாட | குடத்தனை | 53 | 42 |
| 12. | மணியகாரன் தோட்டம் த. வித். | கரவெட்டி | 56 | 56 |
| 13. | அல்வாய் வட.றோ. க. த.க. பா. | அல்வாய் | 103 | 66 |
| 14. | கற்கோவளம் மெ. மி. த. க. பா. | பருத்தித்துறை | 55 | 38 |
| 15. | தம்பசிட்டி மெ. மி. த. க. பாட. | பருத்தித்துறை | 105 | 75 |
| 16. | சித்தங்கேணி கணேச வித். | பண்டத்தரிப்பு | 40 | 33 |
| 17. | தெல்லிப்பளை சை. பி. வித். | சுன்னாகம் | 37 | 13 |
| 18. | வட. இந். ம. கல்லூரி | பருத்தித்துறை | 330 | 46 |
| 19. | மணற்காடு றோ. க. த. க. பா. | குடத்தனை | 75 | 23 |
| | | மொத்தம் | 1492 | 725 |

துன்னாலை அ. த. க. பாடசாலை கரவெட்டி 50 — 6 பேர் 48 புள்ளி.

★ இப்போட்டிக்கான பரிசில்கள் 04-10-92-ல் சரஸ்வதிபூசை

# 5-ம், 6-ம், 7-ம் ஆண்டு மாணவர்களுக்கு பெறும் பாடசாலைகளின் விபரங்களும் பரிசில் தொகையும்

| தேர்வுக்குத் தோற்றிய விகிதாசாரம் | மொத்தப் புள்ளி விகிதாசாரம் | பரிசில் பெறும் மாணவர் தொகை | 1-ம் பரிசில் பெறும் மாணவர் தொகை | 2-ம் பரிசில் பெறும் மாணவர் தொகை | 3-ம் பரிசில் பெறும் மாணவர் தொகை | குருவணக்கம் செலுத்திய ஆண் மாணவர்கள் | குருவணக்கம் செலுத்திய பெண் மாணவர்கள் | மொத்தப் பரிசில் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 100 | 41·5 | 07 | 2 | 03 | 02 | 01 | — | 4100 |
| 52 | 39 | 30 | 3 | 15 | 12 | 04 | 07 | 14600 |
| 38 | 37 | 44 | 10 | 13 | 21 | — | 12 | 14700 |
| 55 | 37 | 14 | 02 | 04 | 08 | 05 | 09 | 7400 |
| 56 | 30 | 22 | — | 08 | 14 | — | — | 7500 |
| 100 | 27 | 03 | 01 | 02 | — | — | 01 | 2100 |
| 90 | 26 | 02 | — | — | 02 | — | — | 500 |
| 67 | 24 | 01 | — | — | 01 | — | — | 250 |
| 85 | 22 | 03 | — | 01 | 02 | — | — | 1000 |
| 66 | 18·5 | 08 | — | 02 | 06 | 02 | 04 | 3100 |
| 80 | 18 | 08 | 02 | 03 | 03 | 01 | 04 | 4750 |
| 100 | 16·5 | 08 | — | 06 | 02 | 01 | 05 | 4100 |
| 64 | 15 | 07 | — | 02 | 05 | 05 | 02 | 2950 |
| 68 | 14 | 06 | 01 | 03 | 02 | — | — | 3000 |
| 71 | 12 | 07 | 01 | 02 | 04 | 01 | 01 | 3200 |
| 82 | 9 | 0 | — | — | — | — | — | — |
| 35 | 3 | 0 | — | — | — | — | — | — |
| 14 | 36 | 20 | 06 | 06 | 08 | — | 15 | 8000 |
| 30 | 12 | 02 | — | 01 | 01 | 01 | 01 | 950 |
| | | 192 | 28 | 71 | 93 | 21 | 60 | 82200 |

இப் பாடசாலைப் பரீட்சை நிராகரிக்கப்பெற்றது.

**தினத்தன்று வழங்கப்பெறும்** ★

ஸ—

## மகாகவி பாரதியாரின்

# தேசிய கீதங்கள்

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே — இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே — எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே (செந்தமிழ்)

2. வேதம் நிறைந்த தமிழ்நாடு — உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு
காதல் புரியும் அரம்பையர்போல் — இளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு (செந்தமிழ்)

3. காவிரி தென்பெண்ணை பாலாறு — தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி — என
மேவிய யாறு பலவோடத் — திரு
மேனி செழித்த தமிழ்நாடு (செந்தமிழ்)

4. முத்தமிழ் மாமுனி நீள்வரையே — நின்று
மொய்ம்புறக் காக்கும் தமிழ்நாடு — செல்வம்
எத்தனை யுண்டு புவிமீதே — அவை
யாவும் படைத்த தமிழ்நாடு (செந்தமிழ்)

5. நீலத் திரைக்கட லோரத்திலே — நின்று
நித்தம் தவஞ்செய் குமரிஎல்லை — வட
மாலவன் குன்றம் இவற்றிடையே — புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு (செந்தமிழ்)

6. கல்வி சிறந்த தமிழ்நாடு — புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு — நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் — மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு (செந்தமிழ்)

7. வள்ளுவன் தன்னை உலகினுக்கே — தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு — நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்றோர் — மணி
யாரம் படைத்த தமிழ்நாடு (செந்தமிழ்)

8. சிங்களம் புட்பகம் சாவக — மாகிய
தீவு பலவினுஞ் சென்றேறி — அங்கு
தங்கள் புலிக்கொடி மீன் கொடியும் — நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு (செந்தமிழ்)

ஆடுவோமே — பள்ளுப் பாடுவோமே;
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று (ஆடு)

எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே — பொய்யும்
ஏமாற்றும் தொலைகின்ற காலம் வந்ததே — இனி
நல்லோர் பெரியரென்னும் காலம் வந்ததே — கெட்ட
நயவஞ்சக் காரருக்கு நாசம் வந்ததே (ஆடு)

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் — வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம் — வெறும்
வீணருக்கு உழைத்துடலம் ஓயமாட்டோம் (ஆடு)

நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம் — இது
நமக்கே உரிமையாம் என்ப தறிந்தோம் — இந்தப்
பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம் — பரி
பூரணனுக் கேயடிமை செய்து வாழ்வோம் (ஆடு)

★ ★ ★

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை செய்வா ரடி! — கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடி!

கூட்டத்திற் கூடிநின்று கூவிப் பிதற்ற லன்றி
நாட்டத்திற் கொள்ளா ரடி! — கிளியே!
நாளில் மறப்பா ரடி!

★ ★ ★

வீர சுதந்திரம் வேண்டிநின்றார் பின்னர்
வேறொன்று கொள்வா ரோ? — என்றும்
ஆரமு துண்ணுதற் காசைகொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்துவா ரோ? (வீர)

தண்ணீர் விட்டோ வளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம்; கருதத் திருவுளமோ?
எண்ணமெலாம் நெய்யாக எம்முயிரி னுள்வளர்ந்த
வண்ண விளக்கிஃது மடியத் திருவுள மோ?

௭—

# வீரத் தமிழா! எழுந்திடுவாய்

1 வீரத் தமிழா எழுந்திடுவாய்
வெற்றிச் சங்கம் முழங்கிடுவாய்
சோர்வு போக்கித் துள்ளியும் நீ
சுவர்க்க வாழ்வு கொணர்ந்திடுவாய்

கமழும் நல்ல காவியங்கள்
காட்சி நிறைபே ரோவியங்கள்
குழியிற் புதையா வகைகண்டு
குவலயம் போற்ற வைத்திடுவாய்.

நாட்டது விடுதலை நாட்டிடுவாய்
நன்மொழி தன்னைப் போற்றிடுவாய்
பாட்டொடு தாளஞ் சேர்ந்திடவே
பற்பல கலைகள் பயின்றிடுவாய்.

தமிழ்த்திரு நாடுன் தாயேகாண்
தாழ்வொடு தினமும் பணிவாயே
கமழ்தரு மலர்கள் பதஞ்சூட்டி
கணமும் அவளைத் துதித்திடுவாய்.

உனது பணிகள் பலவுண்டு
ஊக்கம் பொங்க உழைத்திடுவாய்
தனது நலத்தைப் பாராமல்
தாரணி போற்ற வாழ்ந்திடுவாய்.

வீரம் பொங்க விளங்கிடுவாய்
வெற்றி யெங்கும் விளைத்திடுவாய்
தூரங் குறுகக் கண்டிடுவாய்
துரித முறுமுன் உழைப்பாலே.

இன்றே தொடங்கி உழைப்பாயடா
ஏறு போல்நீ நடப்பாயடா
நன்றே கூடி நாமெல்லாம்
நாளும் உன்னைத் துதிப்பமடா!
(வீரத் தமிழா)

1948 'மாலைக்கு மாலை', யாழ்ப்பாணன்
அமரர் வே. சிவக்கொழுந்து, வியாபாரிமூலை.

# தமிழா! தூக்கம் கலைந்திடுவாய்

2 (1948 'மாலைக்கு மாலை', யாழ்ப்பாணன்
அமரர் வே. சிவக்கொழுந்து. வியாபாரிமூலை,)

தமிழா! தூக்கங் கலைந்திடுவாய்
தாழ்வு போக்க எழுந்திடுவாய்
அமிழ்தம் நமது மொழியாகும்
அறிந்து நீயும் உய்திடடா!

அள்ள அள்ளப் பொருள் குறையா
அரிய பெரிய தமிழ் நூல்கள்
உள்ளங் கொள்ளை கொண்டிடவே
உனக்கு வைத்த புதையலடா.

கம்பன் அளித்த காவியமே
கருத்தை யள்ளுஞ் சித்திரமாம்
உம்பர் வானம் ஒப்பில்லை
உண்மை யிதுவென் றறிவையடா.

சேரன் தம்பியின் சிலம்பிதுவே
செகத்திற் சிறந்த ஆரமடா
பாரில் இதனைப் படித்திடுவாய்
பழைய பெருமை ஒலிக்குமடா.

மன்னர் வளர்த்த மகளேகாண்
மாநிலம் போற்றுந் தமிழிவளே
தின்னத் தெவிட்டாத் தேனேகாண்
தேடக் கிடையாச் செல்வமடா!

வீரம் நிறைந்த முன்னோர்கள்
வித்தை பலவுங் கற்றோர்கள்
பாரை ஆண்ட மன்னவர்கள்
பலரின் அம்சம் நீயுமடா.

நாட்டின் பணியை நினைவூட்டி
நன்மகன் தனக்கு வாள் கொடுத்து
வாட்ட மின்றிக் களம்விடுத்த
வனிதையர் தோன்றல் நீயுமடா,
(தமிழா)

ஞ —

# நன்றி உணர்வுடன் பாராட்டுகிறோம்

ஆபத்து வேளையில் உதவிகள் செய்பவர்கள், பொதுப் பணிகளிலே தம்மை ஈடுபடுத்தி நேர்மையாக சேவை புரிகின்றவர்கள், எழுத்தறிவை ஊட்டும் ஆலயங்களான பாடசாலைகளை கட்டிக் கொடுப்பவர்கள், மாணவ சமுதாயத்திற்கு இலவசமாக பாடசாலை தவிர்ந்த நேரங்களில் கல்வி போதிப்பவர்கள் ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள் என்பதோடு எமது நன்றிக்கும், இறை அருளுக்கும் உரியவர்களே.

இதுபோன்று இன்னும், பொது வீதிகளை நிர்மாணித்தவர்கள், அவற்றிற்கான திருத்தங்களை மேற்கொள்பவர்கள், பொது மக்களின் பாவனைக்காக பொதுக் கிணறுகளை அமைத்தவர்களின் காலத்தால் அழியாத சேவைகளை என்றும் நாம் நன்றி உணர்வோடு நினைத்துப் பாராட்டுகின்றோம்.

வீதிகளிலே பயணம் செய்யும் பாதசாரிகளும், வாகனங்களை ஓட்டுபவர்களும் வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளுக்கு அமைய தமது கடமைகளை மேற்கொள்வதன் மூலம் எத்தனையோ மனித உயிர்களை விபத்துக்கள் சம்பவிக்காத வகையில் காப்பாற்றி வருபவர்களையும் நாம் நன்றியுணர்வோடு பாராட்டுகின்றோம்.

இன்னும், வீட்டு வளவுகளின் கேற்றுகளையும், படலைகளையும் தமது வளவின் உட்புறத்தில் பொருத்தி அடுத்தவர்களும் வாழவேண்டுமென்ற நோக்கில் செயல் பெறுபவர்களையும், வீட்டில் சேரும் குப்பை கூழங்களையும், கழிவுப் பொருட்களையும் தெருவில் கொண்டுசென்று பரவாது தமது வீட்டு வளவுகளிலேயே அவற்றைப் புதைத்தோ, எரித்தோ அழித்துவிடுபவர்களையும் நாம் நன்றி உணர்வுடன் பாராட்டுதல் நலமென நம்புகின்றோம்.

சுற்றுப்புறச் சூழல்களை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் சுகாதார நலன்களைப் பேணி, தூய்மையான காற்றினை உருவாக்கி அடுத்தவர் நல்ல மனநிலையோடும், தேக ஆரோக்கியத்தோடும் வாழ வழிசமைக்கும் மக்களுக்கும் நன்றி கூறவும் பாராட்டவும் கடமைப்பட்டவர்களாகின்றோம். இப்படியாக இன்னும் பலர் பராட்டுக்குரியவர்களாக இருக்கின்றார்கள்.

இவ்வாறு நாம் கடமையுணர்வுடன் செயல்பெற்ற பலருக்கு இவ்விதழில் பாராட்டும், நன்றியும் தெரிவிப்பது உங்களில் சிலருக்கு வியப்பை அளிக்கலாம்! இவர்களுக்கு எவ்வாறு இறையருள் கிடைக்கும் என்பது போன்ற எமது விளக்கங்களை அடுத்துவரும் இதழ்களில் காணலாம்.

எ—

# பாராட்டுக் கடிதங்கள்

தங்களது 'அறத் தமிழ் ஞானம்' மருத்துவச் சிறப்பிதழ் பார்வை இட்டேன். இம் மருத்துவச் சிறப்பிதழ் காலத்தால் அழியாத புகழை ஏற்படுத்தும் என்பது நிச்சயம். மருத்துவர்களிடம் கூறுவதற்கு வெட்கப்படும் சில நோய்களுக்கு இம் மருத்துவ இதழ் ஒரு மருத்துவனுக்குச் சமனாகின்றது. கேவல எயிட்ஸ் நோயைக் குணமாக்குவதற்கு தங்கள் மருத்துவ ஆலோசனை மிகவும் பயனுள்ள ஒன்றாகும். வெளிவரும் சஞ்சிகையில் மருத்துவக் குறிப்புக்களுக்கு ஒரு பந்தியை ஒதுக்குதல் வாசகர்களிடம் மிகுந்த வரவேற்பைத் தரும் என்பதில் ஐயமில்லை. தனி ஒரு மனிதனின் உணர்வினால் சமுதாயத்தை என்ன இந்த உலகையே மேன்மையடையச் செய்யலாம் என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கும் தங்களது பயன் கருதா அறப்பணிகள் தொடர வாழ்த்துகிறேன்.

அல்வாய் வடக்கு,
அல்வாய். 1-8-92

தே. மதியழகன்

தங்கள் நிறுவனத்தின் சேவையைப் பாராட்டி இப் பாராட்டுக் கடிதம் அனுப்புவதில் மகிழ்ச்சியடைகின்றேன். தருமம் தலைகாக்கும் என்ற தலையாய நோக்குடன் விரிந்த மனப்பான்மை கொண்ட சேவையை நாம் மட்டுமல்ல இந்த தமிழ் கூறும் நல்லுலகமே என்றும் மறக்க முடியாது. பொருளைத் புதைத்து வைத்து கூடுவிட்டு ஆவிபோனபின் பேயும் பிசாகும் தான் அந்தப் பொருளை அனுபவிக்க பலர் விட்டுச் செல்கின்றனர். ஆனால் தாங்கள் தமிழ் கூறும் நல்லுலகம் வாழ நற்கருமங்களில் செலவு செய்து வருகின்றீர்கள்.

அழிவில்லாக் கல்விச் செல்வத்தை தலையாகக் கொண்டு நற்கருமங்களை ஆற்றிவருகின்றீர்கள். நான் என்ற மமதையை அடக்கி நாம் என்ற கொள்கையைக் கொண்டு வாழ்பவர்கள் என்றும் பிறர்க்கு உரியவர்களே. தன்னலமற்ற தங்கள்

நிறுவனரின் சேவை விரிவடைந்து எங்கும் புகழ் பரப்பி தழைத்தோங்க நாமும் வாழ்த்துகின்றோம்:

வாழ்க உங்கள் நற்பணி - வளர்க உங்கள் விநாயகர் தரும நிதியம்.

எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை
5-8-92
தலைவர்
பாஷையூர் மக்கள் முன்னேற்ற ச. ச. நிலையம்

நீங்கள் அனுப்பிய புத்தகங்கள் கிடைத்து அதை மிக ஆழ்ந்து வாசித்து அறிந்து கொண்டதுமல்லாமல் ஆன்மீகதாக முள்ளவர்களுக்கும் கொடுத்துள்ளேன். வெளியிடுகின்ற ஒவ்வொரு நூல்களையும் தவறாது அனுப்பிவைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

உடம்பில் இரண்டு வகை. ஒன்று தூல உடம்பு 2-வது சூக்கும உடம்பு. இதில் சூக்கும உடம்பு பற்றிய முழுச்செயற் பாட்டையும் மிகவும் விரிவாக ஒரு கட்டுரையாக எழுதிவெளியிட்டால் எம்மைப் போன்ற ஆத்மீக தாகமுள்ளவர்களுக்கு உதவியாக இருக்கும், நூலில் வெளியிடுவது கடினமாய் இருந்தால் விளக்கத்தை எனக்கு எழுதியனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

''சூக்கும உடம்பில் நாம் உண்ணும் உணவுகள் ஆன்ம பலத்தைக் கொடுக்குமென்று கூறுகிறார்கள். ஒரு சிலர் தூல உடம்பிற்கும் சேருமென்று சொல்லுகிறார்கள். இவற்றிற்குரிய சரியான விடை யாது?

31-07-1992
எஸ்: தில்லையம்பலம்
சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு.

தங்களின் கடந்த மாத இலவச வெளியீடுகள் கிடைக்கப்பெற்றேன், எனது சிறு கவிதை அடியும் அதில் வெளியிடப்பட்டிருந்தன. நான் ஊர் சென்றிருந்தபோது எனது மக்கள், மருமக்கள் 'அறம் வளர் இளந் தமிழ்'' சஞ்சிகை படித்துக்காண்டிருந்தார்கள். இவை எல்லாவற்றிற்கும் நன்றியை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தங்களின் சிறுவர் வெளியீட்டில் உள்ள அறிவுப் போட்டி சம்பந்தமாக பாடசாலை மாணவர்கள் பெரிதும் ஆர்வம் காட்டிவருவதை பல இடங்களில் கண்டு கொண்டேன். தங்கள் கேள்வி பதில் பகுதியில் ஒரு வினாக் கேட்டு விளக்கம்பெற விரும்புகின்றேன்.

நவிலட் பாடசாலை. கைதடி
சி. சிவானந்தராசா

# விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு, பருத்தித்துறை.

விநாயகர் — பிள்ளையார், அறிவுப்பொருள், ௧— எண்களில் 3 கிரகங்களில் வியாழ பகவான், மனித அவயத்தில் வலக்கண் இவைகளைக் குறிக்கும்.

ஞாபகார்த்த நிதி — திரு. சி. ஆ. சிவக்கொழுந்து
திருமதி ஆ. சி. இராசம்மா
(வ. கோ. சரவணமுத்துவின் மகள்)
செல்வன் ஆ. சி. மு. சுப்பிரமணியன்

நோக்கம் — அறிவு வளர்ச்சிப் பணி
ஊனமுற்றோர் உதவிப் பணி
கரும யோகப்பணி

## தருமகர்த்தா சபை

திரு. ஆ. சி. முருகுப்பிள்ளை
நிறுவனர், நிர்வாகி, ஆயுட்காலத் தலைவர்

திரு. வ. கு. கணபதிப்பிள்ளை
B, A. (லண்.) சட்டத்தரணி, உப தலைவர்.

திரு. வ. ச. செல்வராசா
செயலாளர் — பொருளாளர்

திரு. க. தங்கராசா
நிர்வாகப் பொறுப்பதிகாரி

கௌரவ உறுப்பினர்கள் :

திரு. அ. துரைசிங்கம்
திரு. சு. வேதாரணியம்
திருமதி கோ. கண்மணி

கௌரவ உப உறுப்பினர்கள் :

திரு. வி. க. கேதீஸ்வரநாதன்
திரு. ஆ. க. சிவப்பிரகாசம்

# எமது வெளியீடுகளை பின்வரும் விலாசங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

★

| | |
|---|---|
| கலைச்சோலை | வல்வெட்டித்துறை |
| அன்னை மருந்தக மருந்துச்சாலை | பருத்தித்துறை |
| அஷ்டலட்சுமி கலண்டர் நிறுவனம் | கண்டிறோட், கைதடி |
| அபிராமி மருந்தகம் | நீர்வேலி |
| பூபாலசிங்கம் புத்தகசாலை | யாழ்ப்பாணம் |
| எஸ். கே. சாமி அன் கோ. | நெல்லியடி |
| தனலட்சுமி புத்தகசாலை | சுன்னாகம் |
| முத்தமிழ் மன்ற நூலகம் | சுன்னாகம் |
| சூரியா பார்மசி | புத்தூர் |
| ரி. வி. பாலா | இனுவில் |

---

*இச் சஞ்சிகை புலோலி மேற்கு பருத்தித்துறை விநாயகர் தரும நிதியத்தினருக்காக உடுப்பிட்டி ஸ்ரீ வாணி அச்சகத்தில் பதிப்பிக்கப் பெற்றது.*